புனிதவதியார

# உரிமையுரை.

௳

சென்னை
மாகாண வளர்ச்சி
நெறிப்பாத்தி அமைச்சரும், தமிழ்ப்
பண்டிதர்களின் நூறாவது பெருங்கூட்டத்
தலைவரும் செந்தமிழ்ப் புரவலருமாகிய கனந்
தங்கிய திருவாளர் திவான்பகதூர் திரு.
தெ. ந. சிவஞானம்பிள்ளை அவர்
கட்கு இந்நூலை உரிமை
யாக்குகின்றேன்.

மு. நடேசன்.

MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
THIRUVANMIYUR MADRAS

# குறிப்பு.

'தமிழகத்துத்தாய்மார்' வரிசையில் இரண்டாவதாக எழுதப்பெற்றது புனிதவதியார் என்னும் இந்நூல். இக்கணமான நூலை அடியேன் எழுதி முடிப்பதற்கு வேண்டிய இன்னருள் சுரந்து உதவிய பெரியார் திருக்கோவலூராதீனத்துத் தலைவரும், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் திருமடாலயத்து அதிபரும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் அவர்கள். அன்னார்களது திருவடிகள் என்றென் மனத்து. இந்நூலைப் படித்துப்பார்த்து, வேண்டுவன கூறி இது வெளிவரும் வகையில் நான்முட்டுறாமல் உபகரித்தவர் திருச்சிராப்பள்ளி உயர்நீதிமன்ற வக்கீலும், சென்னைமாகாண சட்டநிரூபணசபை அங்கத்தினரும் ஆகிய திருவாளர் தி. பூ. நாராயணசாமிப்பிள்ளை அவர்கள் M.A.,B.L., M.L.C., அவர்கள். அன்னாரது தமிழன்பு இன்றுபோன்றே என்றுந் தழைத்தோங்குக.

எனக்கு எவ்விதச் சிரமத்தையுந் தராது எளிதில் இந்நூலை அச்சிட்டு உதவிய 'பணம்' பத்திராதிபரும் ஜனோபகார அச்சுக்கூட அதிபரும் ஆகிய திருவாளர் T. K. இராஜகோபால் நாயுடு அவர்கட்கும், ஒப்பு நோக்குதல், பிழைதிருத்தஞ் செய்தல் முதலியன செய்து வந்த எனது நண்பரும் தோழருமாகிய தமிழ்ப்பண்டிதர் திருவாளர் R. பஞ்சநதம் பிள்ளையவர்கட்கும் எனது நன்றி என்றும் உரியதாகுக.

குற்றங்குறைகளிருப்பின் அறிஞர்கள் பொறுத்துக் கொள்வார்களாக.

மு. ந.

## திருக்கோவலூர் ஆதீனம், திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார்மடாலயம் : ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் அருளியது.

உலகெலாம் உணர்ந்தோதற்கரிய இறைவன் படைத்த இவ்வுலகில், வதியும் மக்கள் பேசும் மொழிகள் காரணமாகப் பல பெயர் உள்ள நாடுகள் ஏற்பட்டன. ஒவ்வொரு நாட்டின் மேன்மையும் அவ்வந்நாட்டின் மொழியின் வளர்ச்சி அளவையேபொறுத்திருக்கின்றது. அவ்வந்நாட்டு மொழியை வளர்க்கின் அவ்வந்நாட்டு நிலைவளரும். மொழியை வளர்ப்பவர்கள் பொதுவாக அவ்வந்நாட்டு மக்களும் சிறப்பாக அவ்வந்நாட்டுப் புலவர்களுமே. புலவர்கள் வளர்க்கும் வகையை எடுத்துக் காட்டி இன்பம் வருவித்தபோதே, மக்கள் ஆதரித்துப் புரக்கப்புகுவார்கள். நாட்டின் முன்னேற்றமும், மொழியின் முன்னேற்றமும் புலவர்களையே பொறுத்திருக்கின்றன. புலவர்கள் பண்டைப் புலவர்களியற்றிய நூலை யாராய்ந்தும், அவ்வக்கால இயல்புகளையுணர்ந்தும், அவ்வந்நாட்டினியற்கைப் பொருளினியல்பு தெரிந்தும், அவ்வந்நாட்டு மக்களினிலையை மாண்புறக்கண்டும், அறிவும் குணமும் ஒழுக்கமும் செல்வமுதலிய பிறநலனும் ஓங்கற்குரிய முறையில் செய்யுளவடிவமாகவும், உரை வடிவமாகவும் நூல்கள்பல இயற்றல் வேண்டும். மக்களுள் பல திறப்பட்ட அறிவு நிலையினர் இருப்பரன்றே? அவரவர் நிலைக்கேற்றவாறும் நூல்கள் இயற்றப்படல்

வேண்டும். எந்நிலையில் இயற்றப்படினும் காலநிலைக்கு முரணாதவாறும், பண்டையோர் முறைக்கு மாறுபாடிலாதவாறும், மொழியின் வரம்பு கடவாதவாறும், மற்றை மொழிகள் ஏற்றம் பெற்று வளர்தற்குரிய காரணங்கட்கு எதிராகாதவாறும், எந்நாட்டு மொழியின் வளமும் இலங்குமாறும், தந்நாட்டு மொழியின் நயம் துலங்குமாறும், ஆய அளவு பிறமொழிகள் புணராதவாறும் இன்னமற்றை நலங்கள் விளங்குமாறும் புலவர்கள் நூல்களைச் செய்தல் வேண்டும்.

இங்ஙனமிருக்க, நம் செந்தமிழ் நாட்டில் இந்நாளில் வேண்டப்படுவன செய்யுள் வடிவ நூலினும் உரைநடை நூல்களே. உரை நடை நூல்கள் பல வெளிவருகின்றன. பெரும்பாலும் வழுச்சொற்கள் மருவுற, முடிபுகள் முரணுற, மரபுகள் தவற, பிறமொழிச் சொற்கள் மலிய நாட்டிற்கும் மக்கட்கும், சமயத்திற்கும், ஒவ்வாப் பொருள்கள் பொதுள வெளிவருகின்றன. இந்நிலை காணுஞ்செந்தமிழ்ச் செல்வர் சிலர், வெளிவருவனவற்றுள் உள்ள வழுக்களை எடுத்துக்காட்ட அஞ்சி இந்நாளில் தமிழ் பெறும் நிலையிற்றோ எனக்கருதி வாளா இருந்து விடுகின்றனர். தமிழ் வளர்ச்சியிற் கருத்திலாச் சிலர் வழுக்களை எடுத்துக்காட்டி இந்நிலையதோ நுங்கள் தமிழ்என எள்ளி நகையாடுகின்றனர். இந்நாளினும் எவ்விதமறுவும் விராவாவகை நூலியற்றுவாரும் உளர். சிறுவழுவுஞ் சேராச் செய்யுள் வடிவநூலும், குறைகளெல்லாம் குறுகா உரைவடிவநூலும் அருகி வெளிவருகின்றன. வெளி வந்திருப்பன போதியனவல்ல. தமிழும் தமிழ்நாடும் தமிழ்மக்களும் தகுதியிலுயர்வு

பெற்றுத் திருந்திய உரைவடிவ நூல்கள் பல வெளி வரல் வேண்டும்.

இங்ஙனம் கருதியிருந்த யாம் விரிசசி பல நன்கு விளங்கு திருச்சிராப்பள்ளியிலுள்ள பிஷப் ஹீபர் கல்லூரித் தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி மு. நடேச முதலியார் வரைந்துள்ள 'புனிதவதியார்' எனும் உரைநடை நூலைப்பெற்று முற்றும் படித்தாம். இப்பண்டிதர் முன்னர் செய்த 'திலகவதியார்' எனும் நூலினும் இந்நூல் இத்தமிழ் உலகிற்குப் பெருநலனுதவும். பண்டைப்புலவர் பாங்குகள்பல்க, இந்நாளியலும் இலங்க, நாடு நகரங்கள் வருணிக்கப் பட்டிருக்கின்றன. இடை இடை வரும் பாத்திரங்களது ஒழுக்கவரலாறு முன்னையோர் வழக்கத்தை அறிவிப்பதோடு இந்நாளிலுள்ளார் திருத்தம் பெறும் முறையினையும் காட்டுகின்றது. அறனெனப்பட்ட இல்லறத்தில் காதலனும் காதலியும் ஒழுகுமாற்றை புணர்த்துகின்றது. தொடர்மொழிகள் சிறியனவும் பெரியனவுமாகக் கலந்து மிளிர்கின்றன. பிறமொழியினியலும் மணக்கின்றது. அம்மை புனிதவதியாரது கருத்துக்கள் ஆங்காங்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. தமிழ் வளர்தற்குரிய சார்புகள் ததும்புகின்றன. சமயத்திணுண்மைகள் பதிதற்குரிய பான்மையில் பகரப்படுகின்றன. தமிழைக்கற்றுத் தேர்ச்சிபெறக் கருதுவார் இன்றியமையாது படிக்க வேண்டிய உரைநடை நூல்களுள் இஃதொன்று என்பது எவ்வகையிலும் மிகையாகாது. கலாசாலையிற்பயிலும் ஆண்மக்களும் பெண்மக்களும் கல்வி அறிவு ஒழுக்கம் முதலியனவை இவ்வுரை நூலைக் கற்று அடையலாமென்பது உறுதியே. தமிழ்மக்களும் தமிழ்ச்

கன்புசெய் தண்ணளியினரும், இவ்வுரை நூலை ஆதரிப்பது இயல்பு என்று எண்ணுகிறோம்.

அன்றும் இன்றும் என்றும் இளையானாய்ச் செந்தமிழ்ப் புலவர்க்குச் செல்லலகற்றி மல்லல்வரச் செய்வதில் இளையானாயுள்ள இறைவன், இப்பண்டிதர்க்கு இன்னபல நூல் செய்துதவுவதற்கு வேண்டும் ஆற்றல் முதலியன தருவான் வேண்டி அவ்விறைவனை வாழ்த்துகின்றனம்.

திருக்கோவலூராதீனம்,
இரத்தாட்சி தை 25-௳

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS

# முகவுரை.

நாட்டின் இலக்கணமெல்லாம் ஒருங்குவாய்ந்ததும், நாகரிகமுடைய தேயங்கட்கெல்லாம் தாயகமாயதும் ஆகிய நம்தமிழகத்தில் பண்டைக்காலந்தொட்டு மங்காச் சிறப்பிற் செங்கோல வேந்தரும், புலத்துறை முற்றிய நலத்தகையாளரும், பொற்புமிகுத்த கற்புடை மகளிரும், முற்றத்துறந்த நற்றவ முனிவரும், தத்துவஞானந்தலை சிறந்தவரும், உத்தமபத்தி வித்தக அடியரும் என இத் திறத்த பெரியோர் எண்ணிலர் விளக்க முற்றிருந்தனர். இன்னோரின் வரலாறுகளை அமிழ்தினு மினிய தமிழ் மொழியினகண் ஆனறோர்களால் அருளிச செய்யப் பெற்று நமக்கு எய்ப்பினில் வைப்பாகக் கிடைத்திருக் கும அரும்பெரும் பனுவல்களை ஆராய்தலினுலறியலா கும். சிவபெருமானுக்குத் திருத்தொண்டு புரிதலாகிய தவநெறிநின்று செயற்கருஞ் செயல் செய்து திருவடிப் பேறு தலைக்கூடிய மெய்யடியார் பலரது வரலாற்றை இனிதெடுத்தோதுவது பெரியபுராணம் எனவழங்கப் பெறும் திருத்தொண்டர் புராணம். சிவானுபூதிப்பெரு வாழ்வாகிய குன்றத்தூர்ச சேக்கிழார் பெருமானல் திரு வருள்வழிநின்று அருளப்பெற்ற இப்புராணமானது தமிழின் மாண்பையும், சைவத்தின் மேன்மையையும் ஒருங்குணர்த்தவல்ல ஒப்புயர்வற்ற திப்பியசெந்தமிழ்ப் பெருநூலாகும். இந்நூல்கூறும பெரியார்களில் ஒருவர் காரைக்கால் அம்மையார் என்னும் புனிதவதியார். இவரது வரலாறு படிக்குந்தோறும் படிக்குந்தோறும் உள்ளத்தை உருகச்செய்து இறைவனிடத்தோ ஒன்று படுத்தும் பான்மையது. இத்தகைய வரலாற்றை நம்

நாட்டு இளைஞரும் முதியருமாகிய ஆடவரும் மகளிரும் ஒருங்குணர்ந்து பயன்பெற வேண்டுமென்னும் பெருவிருப்பாற்றூண்டப்பெற்று, எம்துணைவர் திரு. மு. நடேச முதலியாரவர்களால் எழுதலாயது 'புனிதவத்யார்' என்னும் இந்நூல். இத்திறச் சோழநாட்டையும், காரைக்காற்பதியையும் வருணிக்கும் பகுதிகளில், சங்கத்துச் சான்றோராக்கிய செந்தமிழிலக்கியங்கள் பலவற்றிலுள்ள கருத்துக்கள் தொகுத்துரைக்கப் பட்டுள்ளன. இந்நூல் முழுதும் யாவரும் எளிதின் அறியுமாறு சிறுசிறு சொற்றொடர்களால் இனிய செந்தமிழ்நடையில் எழுதப்பெற்றுளது. முதலியாரவர்களது உரைநடையெழுதுந்திறத்திற்கு அவர்களது பேசுந்திறத்தையே ஒப்பாகக் கூறலாகும். இந்நூலைப் படித்தலால் இல்லறத்தியல்பும், கற்பின்சிறப்பும், இறைபணிப் பெருமையும் முதலியன விளக்கமாம். தமிழ்நாட்டின் பழம்பெருமையும் புலனும். மாதர்களின் மேதகவும் வெளியாம்.

தமிழகத்துத் தாயமார் வரலாறு என்னும் நூல் வரிசையில், தமிழ்மக்கட்கு நல்விருந்தாக முதலியாரவர்கள் முன்பு வெளிப்படுத்துதவிய திலகவதியார் என்னும் நூல்போன்று இந்நூலும் பலரானும் பாராட்டற்குரியதொன்றாம். பள்ளிக்கூட நிருவாகிகள் இதனைப் பள்ளியிற் பாடமாக வைத்துப் பயன்படுத்த வேண்டு மென்பதும், தமிழ்மக்கள் பலரும் இதனை ஆதரித்து இத்தகைய முயற்சிக்கு ஊக்கம் விளைக்க வேண்டுமென்பதும் எமது விருப்பமாகும்.

பண்டிதர், ந. மு. வேங்கடசாமி நாட்டார்,
தலைமைத்தமிழ் விரிவுரையாளர்,
பிஷப்ஹீபர் கலாசாலை, திருச்சிராப்பள்ளி.

உ

ஓகையாற் றிரைபுன் னுள் ளுழக்குமா
வினையும் வாட்டு
மோகவெவ் வரையி னெல்லை யிடித்திடு
மிமையோர் போற்ற
தோகைமே லுலவுங் கந்தன் சுடர்க்கரத்
திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை வணங்குவ
தெமக்குவேலை.

சைவ—எல்லப்பநாவலர்

நப்படிக ணுடகத்தை ஞானவிழி யாற்றினைக்கு
யம்மை திருப்பாத நினைப்பாம்.

மறைஞான சம்பந்தர்.

தோற்ற மில்பரஞ் சோதிதன் வாய்திறந்
தாற்ற வன்புட னம்மையோ யென்னுமோ
பேற்றை யுன்பெறப் பேயுரு வெய்திய
சாற்ற ரும்புகழ்த் தாயை வணங்குவாம்.

துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகள்.

# புனிதவதியார்

## 1 நாயன்மார்.

உலகின் உயர்விற்குக் காரணர் உத்தமத் தாய்மார்களே. முற்காலத்தில் நம் தமிழ்நாடு பல்வகைகளாலும் உயர்வுற்றிருந்த தென்பதை எவரும் மறுக்கார். அக்காலத்தில் அறிவிற் சிறந்த தாய்மார்கள் பலர் நம் தமிழ்நாட்டிடைத் திகழ்ந்தனர். அவர்களுள் ஒருவர் மனிதரெல்லாம் போற்றும் புனிதவதியாராவர். இவ்வம்மையாரின் வரலாற்றைச் சிறிது பார்ப்போம்.

முன்னைப் பெரியார் நிலப் பரப்பை நான்கு பகுப்புகளாகப் பிரித்தனர். அப்பகுப்புகளை முறையே குறிஞ்சி நிலம் முல்லை நிலம் மருதநிலம். நெய்தல் நிலம் என்பர். இக்காரணத்தால்தான் நூல்களில் சிலவிடங்களில் நிலத்தைப்பற்றிக் கூறும்பொழுது நானிலமென்று கூறுவது. இந்நான்கு பகுப்புகளோடு பாலையென்ற ஒரு பகுப்பையுஞ் சேர்த்துக் கூறுவாருமுண்டு. மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சியாகும். காடும் காடுசார்ந்த இடமும் முல்லையாகும். வயலும் வயல் சார்ந்த இடமும் மருதமாகும். கடலும் கடல்சார்ந்த இடமும் நெய்தலாகும். மலைசார்ந்த இடமும் காடு சார்ந்த இடமும் பொழுது வேற்றுமையால் மாறுபாடுற்று, சுரமாதலுமுண்டு. அப்பொழுது அதற்குப் பாலையென்று பெயர்.

இவ்வைந்து பிரிவுகளுக்குள்ளே நமது புனிதவதி யம்மையார் தமிழ் நாட்டில் கீழ்ப்பாலுள்ள கீழ்க்கடலை யடுத்த நெய்தல் நிலத்தில் திரு அவதாரஞ் செய்தார்கள். நெய்தல் நிலமே மற்றை நிலங்களுக்கெல்லாம் ஆதார மாக இருக்கும் நிலமாகும். நெய்தல் நிலம் இன்றேல் ஏனைய நிலங்கள் நிலைத்திருக்க வியலா. எந்நிலத்திற் கும் இன்பந்தருவது உதவுவது மழையன்றோ? மழை யின்றேல் நதி ஏது? குளம் ஏது? ஏரி ஏது? இவைகள் இன்றேல் உழவுதான் ஏது? உண்பொருள்தான் ஏது? ஆதலால் மக்களுக்கு உண்பொருளைத்தந்து உதவுவது மழையே யாகும். அம்மழைக்கு முதற்காரணமாயிருப் பது கடலாகும். அதனாலன்றோ ஆசிரியர் பரிமேலழ கரும் 'மழைக்கு முதலாய கடல்' என்று அருள்வா ராயினர்.

மழையின் உதவியால் பெறலாகும் உண்பொருள் களுக்கெல்லாம் உருசியைத் தருவது உப்பாகும். அவ் வுப்பைத்தருவதும் நெய்தல் நிலமாகும். குறிஞ்சி, முல்லை, மருத நிலங்களில் விளையும் பொருள்களன்றி நெய்தல் நிலமக்கள் வாழவும் இயலும். ஆனால் நெய்தல் நிலம் தரும் அப்பும் உப்புமின்றி ஏனைய நிலத்தோர் வாழ்தல் இயலாது

குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய நிலங்களிலிருப் போர் மழையின் தவியைக்கொண்டு விளைபொருள்களை விளைவிப்பார்கள். ஆனால் நெய்தல் நிலத்திலுள்ளோர் தங்கள் நிலத்தின முக்கிய விளைபொருளாகிய உப்பை வெயிலின் உதவியைக்கொண்டே விளைவிப்பார்கள்.

இக்கடற்கரையில் தாழைச்செடிகள் மிகுதியாய்

வளர்ந்திருக்கும். முள்ளைப் புறத்தே தாங்கிய நீண்ட இலைகளையுடைய தாழையின் மடல்களின்மேல் சங்கு முத்துகளை ஈன்றிருக்கும். அத்தோற்றம் கருங்கழியின் கரையில் பெரியார் ஒருவர் நீறு அணிந்து தவஞ் செய்தும் பெறுதற்கரிய சிவபிரானின் செஞ்சடையிலுள்ள வெண்மதியை அழைத்து, கண்களினின்றும் நீர் பெருகக் கலந்து தழுவி வெள்ளிய சோற்றை உண்பாயாக வென்று உடுக்களின் கூட்டங்களோடு திங்களையும் தாங்கிக்கொண்டிருப்பதைப் போன்றிருக்கும். தாழையானது உப்பங்காற்று வீசும் கடற்கரையிலிருந்தும், வேறு நாற்றம் வீசாது நறுமணத்தையே கமழும். உயிரிற் கலந்த இறைவன் உயிரின் வினையை தான் பற்றுக் கொள்ளாததுபோல் மீன்நாற்றத்திற்கும் உப்பு நாற்றத்திற்கும் இடையில் நிற்கும் தாழை அந்நாற்றத்தை ஏற்றுக்கொள்ளாது, நறுமணமே கமழும். தாழைகள் கடல் நீரால் நனையப்பெறுவது, முன்னொருநாள் சிவபிரான் முடியைப் பிரமன் கண்டானென்று கூறிய பொய்யினால் விளைந்த இடரைக் களைந்துகொள்ளும் பொருட்டு, இடைவிடாது கடல் நீரில் மூழ்கி எழுவது போன்றிருக்கும்.

அந்நெய்தல் நிலத்தில் கரிய கிளைகளையுடைய புன்னை மரங்களும், ஞாழல் மரங்களும், கண்டல் மரங்களும் அடர்ந்திருக்கும். இம்மரங்களின் மலர்களும், தாழையின் மலர்களும், நெய்தலின் மலர்களும் கடல் மீனின் நாற்றத்தை யொழிக்கும். நீண்ட காலையுடைய நாரைகள் தம் பெடைகளோடு இரைதேடி, சிறுமீன்களைப் பிடித்து, புன்னைமரக் கோடுகளிலிருக்கும் தம் பிள்ளைகளின் வாயில் அருத்தும்.

ஆமை ஐந்து உறுப்புகளையும் அடக்குஞ் சக்தியை யுடையது. ஐந்து உறுப்புகளையும் வெளிக்கொணர்ந்து விட்டும், வேண்டாங்கால் இழுத்துக்கொள்ளும். அவ்வாறு உறுப்புகளை இழுத்துக்கொண்டபொழுது ஆமையைப் பார்த்தால் வெறுங்கோடு போன்றிருக்கும். இவ்வாறு உறுப்புகளை உள்ளே இழுத்துக்கொண்டு ஓடுபோன் றிருப்பதால் நாரை முதலிய பறவைகள் அவைகளைக் கவரா. ஆனால் மேலுங்கீழுந் துள்ளித் திரியுஞ் சிறு மீன்களோ நாரை முதலிய மீன் கவருநர் பறவைகளுக்கு இரையாம். அடக்கமுடையார் வெற்றியுறுவர்; அடக்கமில்லார் துன்புறுவர் என்னும் உண்மையை யன்றோ!

வேப்பின் அரும்புபோன்ற கண்களும் வாய்ந்த புள்ளியையுடைய ஞெண்டுகள் இருமருங்கும் புகுந்து திரியும். பகலில் யாரையேனும் பார்த்தால் வளையினுட் புகுந்துகொள்ளும். அவ்வாறு புகுந்தவுடன் நுழைவாயிலையும் மண்ணால் அடைத்துவிடும். இச்செய்கை விருந்தினர்களைக் கண்டு கதவடைக்கும் சில ஈயாப் பாக்களின் செய்கையை நினைவூட்டும்.

மரக்கலங்கள் பல ஒருகரையிலிருந்து மற்றொரு கரைக்குச் சரக்குகளை யேற்றிச் செல்லும். இக்கரையிலிருக்கும் பொருள்களை அக்கரையில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு அக்கரையிலுள்ள பொருள்களை இக்கரைக்கு ஏற்றிக்கொண்டுவரும். அவை ஒரு அரசன் சொல்லும் செய்தியை மற்றொரு அரசனிடத்திற்சென்று அறிவித்து அவன் சொல்லும் செய்தியை இங்குவந்து அறிவிக்கும் தூதனை ஒத்திருக்கும். சில சமயங்களில் கலங்கள் உயர்பொருளைத் தாங்கிச்செல்லும். வேறுசில

சமயங்களில் உயர்வில் பொருள்களைத் தாங்கிச்செல்லும் மறுமுன், சில சமயங்களில் ஒப்பொருளுமில்லாது இயங்கும் உயிர்கள் சில சமயங்களில் உயர்ந்த போகங்களையும் வேறு சில சமயங்களில் தாழ்ந்த போகங்களையும் நுகர்வதையும் மற்றுஞ்சிலசமயங்களில் எவ்வித போகத்தையும் நுகராமலிருப்பதையும் நினைப்பூட்டும். பல சரக்குகளை யேற்றிக்கொண்டு நீகாமன் செலுத்த, பெரியபட்டினத்தின் ஒப்பாறு துறைமுகத்தை நோக்கிச் செல்லும்பொழுது சுழற்காற்றுகள் தொடர்ந்துவர பெருங்கடலில் அப்புறத்து அலைகளினால் அலைப்புண்டு பெரும் பாறையில் தாக்கி பாய்மரம் முறிந்து பாய்களெல்லாங் கிழிபட்டு சில மரக்கலங்கள் அழியும். இசசெய்கை, பொய்யும், நோயும், நரையும் துன்பமுமாகின்ற பல சரக்குகளை யேற்றிக்கொண்டு வினையாகின்ற நீகாமன் செலுத்த, ஐம்புலன்களாகிய சுழற்காற்றுகள் தொடர்ந்து வர பிறப்பென்கிற பெருங்கடலில் துன்பமாகின்ற அலைகளால் அலைப்புண்டு, குடும்பம் என்கிற பெருங்கல்லில் தாக்கி அழிவுறும் மக்கள் யாக்கையை ஒத்திருக்கும். பெரிய நாவாயின் வாயிலாக கரிய யானைகள் வந்து இறங்கும். அவ்வாறு இறங்கும் கரிகளுக்கும் நீருண்ட முகில்களுக்கும் வேற்றுமை தெரிவதில்லை. பாய்களோடிய மரப்படகுகள் பல தோன்றும். படகின் காட்சி களிறனையும் பாய்மரம் யானையைப் பிணிக்குந் தறியைப் போலிருக்கும்.

கடலில் கப்பல் பாய்களோடு மிதந்து செல்லும் பெருங்கலங்கள் நிமிர்ந்து செல்லும் தேர்களை ஒத்திருக்கும். பெரிய மகர மீன்கள் யானைகளைப் போன்றிருக்

கும். திரைகள் பரிகளைப் போன்றிருக்கும். மீன்கள் காலாட்களைப் போன்றிருக்கும். கடலொலியும் நான்கு படைகளாலாகிய பேரொலியை ஒத்திருக்கும். இத்தன்மையால் கடலரசனாகிய வருணன் தன்னுடைய நான்கு வகையினவான படைகளொடு போருக்குப் புறப்படுவது போன்றிருக்கும்.

ஆழ்ந்த கருத்துகளடங்கிய பெருநூல்களில் அரிய பொருள்கள் பல அடங்கிக் கிடக்கும். நுண்ணிய அறிவினையுடைய பெரும் புலவர்கள் அவ்வரும் பொருள்களைப் பலருங் கைக்கொண்டு மகிழுமாறு ஒவ்வொன்றாக எடுத்து வெளியிடுவர். அவ்வாறே நுளையர் அரும் பொருள்களெல்லாம் அடங்கிக் கிடக்கும் கடலினுள் மூழ்கி ஒளிவீசி விளங்குகின்ற மணிகள் பலவற்றையெடுத்துக் கரையில் குவிப்பர். பார்ப்பதற்கழகாய்ப் பவழக்கொடிகள் எங்கும் பரந்து கிடக்கும். அக்கொடிகளின் மேல் வெள்ளிய சங்குகள் ஊர்ந்து செல்லும். அவ்வாறு செல்வது சிவபெருமானின் செஞ்சடையில் வெள்ளிய மதி ஊர்ந்து செல்வது போன்றிருக்கும்.

உணங்கலை உண்ணக் கொடிக்கூட்டங்கள் வரும். அவைகள்பால் பகைமை கொண்டு நெய்தல்நில மங்கையர்கள் அவ்வுணங்கலை உண்ணாது ஓட்டுவார்கள். அப்பெண்களின் தீங்குரலுக்கு எதிரிடையாக இசைக்குந் தீங்குரலையுடையன குயில்கள். அக்குயில்கள் காக்கையின் கூடுகளில் முட்டைகளையிட்டுச் செல்லும். அம்முட்டைகளை ஆதரித்து, அவைகளினின்று வெளியுறும் கோகிலங்களைப் பாதுகாத்து வெளிப்படுத்தும் காக்கைகள். தமக்குப் பகைமையாயிருக்கும் கோகிலங்களுக்குத் தாயாகித் தயவுகாட்டுவதால் இம்மங்கையர்கள் அக்

கொடிக்கூட்டங்களை யோட்டுவார்கள்.

இத்தகைய சிறப்புகள் வாய்ந்த நெய்தல் நிலத்தில் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இடங்கள் பல வுண்டு. அவற்றுள் சில திருச்சாய்க்காடு, திருப்பல்லவனீச்சரம், திருமறைக்காடு, திருஅகத்தியான்பள்ளி திருத்தருமபுரம், திருவேட்டக்குடி திருத்தெளிச்சேரி திருவொற்றியூர், திருமயிலை, திருப்பாதிரிப்புலியூர் முதலியனவாம்.

இவ்வாறு இறைவன் எழுந்தருளி யிருப்பதற்கு இடங்கள் பல தந்ததோடு, இறைவனடியாரிடத்தும் இடையறாத அன்புகாட்டும். கல்லிற்பூட்டிக் கடலில் வீழ்த்திய நாவுக்கரசரைக் களிப்புடன் தாங்கிக் கரை சேர்த்தது கடலன்றோ? ஓடும் பொன்னும் ஒப்பநோக் கும் முற்றுந்துறந்த பட்டினத்தடிகள் நாட்டிய பேய்க் கரும்பை யாவரும் பேணும் தீங்கரும்பாக்கியது நெய்தல் நிலமன்றோ?

# 2 நகரவளம்.

இன்பராறு பல்வளங்களும் வாய்ந்த நெய்கல் நிலத்தில் ஓர் ஊர் உண்டு. அவ்வூர் பலவகைக்கான வளங்களையுமுடையது. அது புறநகர் இடைநகர் அகநகர் என்ற முப்பகுப்புகளையுடையது.

புறநகரென்பது அகநகர்க்கும் இடைநகர்க்கும் அப்பால் வெளியில் பொருந்தியிருப்பது. இப்புறநகரின்கண் கரிய முகிலனைய வேழங்களைக் கட்டியிருப்பார்கள். சிறிய கண்களையும் பருத்த உடலையுமுடைய அவ்யானைகள், வயிறாரவுண்டு, மதஞ்சொரிந்துகொண்டு யானைக்கூடங்களில் கால்பெயராது அசைந்த வண்ணமாய் நின்று கொண்டிருக்கும். புதிதாய்க் கொணர்ந்த யானைகட்கு வடமொழி பயிற்றிப் பாகர் அவைகளை அடக்கி யாளுவர். காலையிலும் மாலையிலும் நீர் நிலைகளுக்கு அவ்யானைகளைக் கொண்டுபோய் நீர்பருகச் செய்வார்கள். மாதவர்கள் தூயநீரைப் பருகுவதற்குமுன், அந்நீரை ஞாயிற்றுக்குமுன் இறைத்துவிட்டுப் பருகுவதுபோல்; இவ்யானைகளும் நீரைத் துதிக்கையினால் வாரி இறைத்துவிட்டே பருகாநிற்கும். யானைக்கூடங்களுக்கு அடுத்துத் தேர் நிலைகள் உண்டு. அத்தேர்கள் முடிகளின்மேல் முகில் தவழும். இவைகளையடுத்து மந்துரைகள் பலவுண்டு. அங்கே பரிகளைப் பூட்டியிருப்பார்கள். இவைகளையடுத்து வீரர்கள் போர்த்தொழில் பயிலும் கல்லூரிகள் பலவுண்டு. வலிமிகுந்த வீரர்கள் பெருங்கல்லைத் தலைக்குமேல் தூக்கிச் சுழற்றுவார்கள். அத்தோற்றப்

திருமால் கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்ததை ஒத்திருக்கும்.

இத்தகைய புறநகர்க்கு உள்ளாகவும் அகநகர்க்கு வெளியாகவும் இடையில் இருப்பது இடைநகராகும். இவ்விடைநகரில் செய்குன்றுகளையும், பொய்கைகளையும், வண்டுகள் இசைபாடும் மலர்கள் நிறைந்த ஓடைகளையும் உடைய உய்யானங்கள் நிறைந்திருக்கும். உய்யானங்கள் ஒப்புயர்வற்றனவாயிருக்கும். பார்க்கப் பார்க்கப் பார்ப்போர் மனதைக் கொள்ளைகொள்ளும். மரக்கொம்புகளில் தும்பிகள் குழல்போன்றிசைக்கும். வண்டுக் கூட்டங்கள் மெல்லிய யாழ்போன்று மிழற்றும். மேலே மெல்லிய சிறகுகளையுடைய குயில்கள் பாடும். கவினுறு மயில்கள் களிப்புடனாடும். பெண் அன்னத்தைப் பிரிந்த ஆண் அன்னமும் மயிற்பேடையும், ஆண் மயிலுங்கூடிக் குலவிக் குதித்து விளையாடும். இத்தோற்றம் பல தேவரும், நப்பின்னையும், கண்ணனும்கூடிக் குரவைக் கூத்தாடுவது போன்றிருக்கும். அச்சோலையில் மாதர்கள் ஆடுவதற்கு ஊசல்கள் உண்டு. அவ்வூசல்களில் பெண் குரங்குகளையேற்றி, ஆண் குரங்குகள் அவ்வூசல்களைச் செலுத்தும். கமுகமரத்தை யடுத்துள்ள முல்லைக் கொடி அம்மரத்தைச்சுற்றி படர்ந்திருக்கும். அக் கமுக மரத்தின்மேல் மயில் தனது தோகைகளை விரித்துக் கொண்டாடும். குரங்கு ஒன்று பலவின்கனியைத் தூக்கிக்கொண்டு கொடியின்மேலேறிச் செல்லும். மயில் கழையின்மேல் நின்றாடும் கூத்தியர் போன்றிருக்கும். குரங்கு பலவின்கனியைத் தூக்கிச்செல்வது கழைக் கூத்தாடி குடத்தைத் தூக்கிக்கொண்டு கம்பத்தின்

மேல் ஏறிச்செல்வது போன்றிருக்கும். இவ்வுய்யானத் தில் நெய்தல்நிலப் பொருள்களோடு பிறநிலப் பொருள் களும் பொருந்தியிருக்குந் தோற்றம் திணைமயக்கத்தை நினைப்பூட்டும்.

இத்தகைய வளங்கள் மிகுந்திருக்கும் இடைநகரை யடுத்திருப்பது அகநகராகும். அந்நகரைச்சூழ்ந்து ஆழ்ந்த அகழி உண்டு. அவ்வகழியில் கராமுதலிய நீர் வாழ் விலங்குகள்உண்டு. அகழியை அடுத்து உயர்ந்த மதிலுண்டு. அம்மதிலின் மேல் பகைவர்களைத் தாக்க வல்ல பொறிகள் பலவுண்டு. விண்ணின்மேல் நிவந்துள்ள கோபுரங்கள் பலவுண்டு. அவைகளின்மேல் பலவகை யனவான கொடிகள், வருகிறவர்களை வரவேற்பது போல், அசைந்து ஆடிக்கொண்டிருக்கும். அவ்வகநகரி னுள் ஆலயங்கள் பலவுண்டு. பலபகுப்பினரும் வாழ் வதற்குரிய மாடமாளிகைகள் உண்டு. சரியையிற் சரி யாது இயற்றுவோர் மடங்கள் ஒருபுறமுண்டு. கிரியை யைத் தளராது புரிவோர் மடங்கள் ஒருபாலுண்டு. யோ கத்தை உணங்காது பழகுவோர் மடங்கள் ஒருசிறை யுண்டு. அஞ்ஞானமொழிந்து மெய்ஞ்ஞானங்கொண் டார் வாழும் மடங்கள் ஒருபுறமுண்டு. பதிநூல்களை யாராய்கின்ற பட்டிமண்டபங்கள் பலவுண்டு. அம் மண்டபத்தில் அறிஞர் கூட்டங் கூட்டமாய்க்கூடி அரு மறைகளையும் ஆகமப் பொருள்களையும், இதிகாச புரா ணங்களையும், சாஸ்திரங்களையும், தோத்திரங்களையும் ஆராய்ந்து ஓதுவார்கள்.

இத்தகைய சிறப்புகளெல்லாம் வாய்ந்த மூன்று பகுப்புகளையும் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கும்

அழகிய நகரை, காரைக்கால் என்பர். காரைக்காடு மிகுதியாய் நிரம்பியிருந்தமையால் இதற்கு காரைக்கான் என்று பெயர் உண்டாகி, பின்பு காரைக்காலென்று வழங்கி வருகிறது என்பர் சிலர். அவ்வூர் மக்கள் பிறர்க்குக் கொடுக்கும் வகையில் காரையும் காற்பங்கு என்று சொல்லும்படி வழங்குவாராகையால் அதற்குக் காரைக்காலென்று பெயர் வந்தது என்பர் சிலர். இவ்வூரில் பெருமையுற்று விளங்கும் குடிமக்கள் வணிகராவர் மக்களுக்கு வேண்டுவனவாகிய பொருள்களையெல்லாம் விற்பார்கள். நிலங்களின் வழியாகவும் நீரின் வழியாகவும் பல பொருள்களையும் வருவிப்பார்கள். அவ்வாறே தம் நாட்டுப்பொருள்களையும் பிறநாடுகளுக்கு ஏற்றுவிப்பார்கள். ஒரு பொருள் கிடைக்கக்கூடிய காலத்தில் அதனைக் குறைந்தவிலைக்கு வாங்கி சேர்த்துவைப்பார்கள். கிடைக்காத காலத்தில் அதிக விலைக்கு விற்பார்கள். பொன், வெள்ளி அணிகள், ஆடைகள் மணிகளாலாகிய மாலைகள் முதலியன என்ன வேண்டினும் இல்லையென்று கூற மாட்டார்கள். கடையின் முகப்பில் ஓங்கியுயர்ந்த பந்தல்கள் அமைத்திருப்பார்கள். அப்பந்தலின் முகப்பை வாழை கமுகு முதலிய மரங்களால் அலங்கரித்திருப்பர். முன்னிடங்களில் வாசனைப்பொடிகளைத் தூவியிருப்பது, பார்ப்பதற்கு அழகாயிருக்கும். அப் பந்தலினிடையில் நல்ல ஆசனங்களில் வணிகர் அமர்ந்திருப்பர். அவ்வணிகர் கிடங்குகளில் குறிஞ்சி நிலப்பொருள்களாகிய தினை, அகில், ஆரம், தேக்கு, தேன் முதலியவைகளை ஒருபுறங் குவித்திருப்பார்கள். முல்லை நிலப் பொருள்களாகிய வரகு, சாமை, மான்கொம்பு, முதலிய

வைகளை ஒருபுறங் குவித்திருப்பார்கள். மருத நிலப் பொருள்களாகிய செந்நெல், வெண்ணெல் முதலியவைகளை மற்றொருபுறங் குவித்திருப்பார்கள். நெய்தல் நிலப் பொருள்களாகிய உப்பு, தாழை மலர் முதலியவைகளை மற்றொருபுறங் குவித்திருப்பார்கள். உண்மைச் சமயம் முன்னொன்று கூறிப் பின்னொன்று எவ்வாறு கூறாதோ அவ்வாறே இவ்வணிகர்களும பொருள்களின் விலையை முன்னொரு மாதிரியாகவும் பின்னொரு மாதிரியாகவுங் கூறமாட்டார்கள். இவ்வாறு நன்னெறியில் பொருள் ஈட்டிய இவர்கள் என்றும் போகத்தையே துய்த்து வருவார்கள். அப்போகந் தானும் தருமவாயிலாக வந்ததாகும். தருமஞ் செய்வதற்குப் பெருந்துணையாய் இருப்பது அன்பேயாகும். அவ்வன்பும் தவத்தால் விளைவதாகும். தவமாவது பிறவுயிர்கட்குத் துன்பஞ் செய்யாதிருத்தலும் தனக்கு வருந்துன்பங்களைத்தானே அனுபவித்துக் கொள்ளுதலுமாம். இவ்வொழுக்கம் நற்கேள்வியால் உண்டாவதாகும். இக்கேள்வியும் கல்வி யுண்டாயவழிதான் அதிக பயனைத்தரும். ஆகவே இந் நகரில்வாழும் மக்களெல்லாம் இனிய போகங்களைத் துய்த்தற்குக் காரணமாயிருந்தது கல்வியன்றோ?

இத்தகைய போகங்களெல்லாம் எய்தப்பெற்று இனிது வாழும் வணிகர் முத்திறத்தவராவர். அவரை இப்பர், கவிப்பர் பெருங்குடிவணிகர் என்பர். இம்முத் திறத்தவருள்ளும் பெருங்குடிவணிகரே சிறந்தவராவர். கடலானது திரைகளாகின்றகைகளால் அடுத்துள்ள உப்பங்கழியினிடத்தில் தானே சங்குகளை வாரிக்கொடுத்து உதவுவதுபோல் எளியவர்களிடத்தில் இரக்கங்கொண்டு

யும் பெற்றியினர் ஆவர் இப்பெருங்குடியினர். பெருங்குடியினர் என்ற சிறப்புவாய்ந்த பெருங்கூட்டத்தவருள் முதன்மையுற்று ஒருவர் திகழ்ந்தனர். அவரைத் தனதத்தனார் என்பர். தாம் முயன்று ஈட்டிய பெருந்தனத்தை நல்வழியில் தத்தஞ்செய்து வந்ததால் இவருக்கு தனதத்தனார் என்ற பெயர் வந்ததென்பர். இப்பெரியார் இல்லறம் பூண்டு நிறைவேற்றவேண்டிய கடமைகளை இனிது நிறைவேற்றி வரும்பொழுது பிள்ளைப் பேற்றையுன்னித் தவம்புரிவாராயினர். உலகில் ஒருவர் எண்ணியதை எண்ணியவாறே முடிப்பது தவமன்றோ?

## 3. இளமைப்பருவம்.

தனதத்தனாரின் தவத்தின் உயர்வால் உம்பரும் இம்பரும் ஒருங்கே போற்றுமாறு ஒருபெண் மகவுபிறந்தது. அக்குழந்தைஉருவில் திருவை ஒத்திருந்தது. அழகு மிகுந்து விளங்கும் அக்குழந்தைக்குப் புனிதவதியாரென்று பெயரிட்டனர். வணிகர்களின் பெருமை தங்கிய குலம் விளக்கமுறும்படித் தோன்றிய அம்மையார் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தனர். அழகுவாய்ந்த சிறிய அடிகள் தளர்வுற அம்மையார் நடக்க ஆரம்பித்தனர். புனிதவதியார் பொற்புறு நடை பயிலும்பொழுதே அற்புறு மொழி பயிலத்தொடங்கினார். குழவிகளின் மழலைச் சொற்கள் மக்களுக்கு இன்பமூட்டும். ஆன்றோர்கள் அச்சொற்களைக் கேட்கும் பேறை பெரும்பேறு என்பார்கள். பாலைப்பாச்சியென்றும் சோறைச் சோச்சியென்றுந் தத்தித்தத்திப்பேசும் மழலைச் சொற்களுக்கு யாழும் குழலும் ஈடாகா என்பர் அறிஞர்.

> "குழலினிது யாழினி தென்பதம் மக்கண்
> மழலைச்சொற் கேளா தவர்."—திருவள்ளுவர்

> "அரிகொள்பொன் புனைகிண்கிணி தண்டைபோ டணிந்த
> தருணமென் றளிர்ச் சீறடித் தளர் நடைச் சிறுவா
> மருவருக செவ்வாம்பல் வாய் மழலையா ரமுதம்
> பருகிலாச்செவி பறையின் செவியெனப் படுமால்"
>
> துறைமங்கலம் சிவப்பிரகாசர்.

புனிதவதியாரின் மழலைமொழிகளைக்கேட்டு மகிழாதாரில்லை. கேட்டவர்களெல்லாம் வேட்கையுறு அம்

மொழிகள் ஏனைய மக்கள் பயிலும் மொழிகள் போன்றனவாயில்லை. இறைவனிடத்தில் அன்பு பெருக்குவனவாயிருந்தன அம்மழலை மொழிகள்.

அன்புருவ இன்பமொழிகள் பயின்றுவரும் புனிதவதியாருக்குப்பருவங்களில் செய்யவேண்டியசிறப்புகளையெல்லாம் செவ்வையாய்ச செல்வப்பெருக்கைச் செலவிட்டுச் செய்தனர். இவ்வாறு புனிதவதியார் வளமொடு வளர்ந்து வருகையில அவர் உள்ளத்தில் உமைபாகனிடத்திலும் அவன் அடியவரிடத்திலும், அன்புகசிந்து ஊறத்தொடங்கிற்று.

தனதத்தனாது அரும் புதல்வியார் இவ்வாறு வளர்ந்துவருகையில் பலவகையனவான விளையாட்டுகளை விளையாடி வந்தனர். மூவர்கூடி அம்மனை யாடுவர். சிலர் கூடிச் சுண்ணம் இடிப்பர், சிலர் கூடிப் பந்தாடுவர். பூங்காவில் மணமுறுமலர்கொய்து மங்கையர் பலர் ஆடிடுவர். வேறுசிலர் செய்குன்று ஏறிச்சிறப்பாய் விளையாடுவர்-பல்வகை ஆடல்களைப்புரியும் போதெல்லாம் பாடல்களையும் பாடுவர். பொற்புறு புனிதவதியார் விளையாட்டுகளை மேற்கொண்டு விளையாடுமபோது பாடிய பாக்களியெல்லாம் சிவமணம் கமழும். அம்மொழிகளெல்லாம் ஆண்டானுகிய ஐயனது அலங்காரங்களையும் அருள் விளையாட்டுகளையும புலப்படுத்துவனவாயிருக்கும்.

இந்நிலையில் அம்மையார் மங்கைப்பருவ மெய்தினர். வீட்டினின்றும் வெளியே செல்லுவதற்கில்லாத நிலையையெய்தினர். மங்கைப்பெண்கள மணம் முடியும் வரை வீட்டினுள்ளேயே தங்கியிருப்பது தொன்று தொட்டு

நம் நாட்டினிடை வழங்கிவரும் வழக்கங்களில் ஒன்று அன்றோ?

இந்நிலையில் அம்மையார் வனப்புமிக்குற்று விளங்கினர். உறுப்பு நூலவர் கூறும் இலக்கணங்களெல்லாம் நிரம்பப்பெற்றுத் திகழ்ந்தனர்.

# 4 திருமணம்.

[illegible] சீரும் சிறப்பும் வாய்ந்த நாகை என்று ஓர் ஊர் உண்டு. அவ்வூரில் நிதிபதியென்று ஒரு வணிகர் இருந்தனர். அவர் தனது அருமைப் புதல்வனுக்குத் தேடுவதற்கரிதாகிய உயர் குலத்திலுதித்த புனிதவதியாரை மணம் முடித்துக் கொள்ள வேண்டுமென்று கருதி ஆன்ற அறிஞர்களை மாடங்கள் நிறைந்து வளங்கொழிக்கும் காரைக்கால் என்னும் ஊருக்குப் பெண் பேசும்பொருட்டு அனுப்பினார். பெண் பேசுவதற்கென்று வந்த முதிய அறிஞர்கள் காரைக்கால் என்னும் பதியையடைந்து புனிதவதியாரின் தந்தையாராகிய தனதத்தனைக் கண்டார்கள். "நாகையிலுள்ள நிதிபதிக்குப் பரமதத்தன் என்ற ஒரு புதல்வன் உண்டு. அவனுக்கு உனது அருமைப் புதல்வியை மணம் முடிப்பதற்கு எண்ணிப் பெண்பேச வந்துளோம். நம்முடைய பழமையான பழக்க வழக்கங்களுக்கு ஏற்றவாறு மணம் முடித்தல் முறைமையாகும்" என்று தெரிவித்தார்கள்.

இந்நற்செய்தியைக் கேட்டனர் தனதத்தர். மகிழ்ச்சி எய்தினர். பெண் கொடுப்பதற்கும் கொள்வதற்கு முள்ள விதிகளையெல்லாம் உன்னி ஆராய்ந்து பார்த்தனர் பெண்ணின் தந்தையார். இறுதியாகப் பெண் தருவதற்கு உடன்பட்டு அந்நற்செய்தியைப் பெண்பேச வந்த அறிஞர்களுக்கு அறிவிக்க வேண்டிய முறைமைப் படி அறிவித்தனர். தனதத்தரிடம் செலவு பெற்றுக் கொண்டு அம்முதியோர்கள் மீண்டு நாகையம்பதியை

யடைந்து, தனதத்தனார் தம் அருமை மகளைத் தருவதற் கிசைந்த செய்தியை நிதிபதியினிடம் அறிவித்தார்கள். இவ்வுரைகளைக்கேட்ட நிதிபதி உயர் சிறப்புகளைப் பெற் றவர்போல் பெரிதும் களிகூர்ந்து, தனது பெருமை தங் கிய ஒப்பற்ற தன் புதல்வனுக்கு மணம முடிப்பதைக் குறித்து தனது செல்வமிகுநத உறவினர்களுடன் உவகை பூத்து கலியாணத்திறகு வேண்டுவன செய்ய மேற்கொண்டனன். விவாகஞ்செய்வதற்குரிய நாளை ஆராய்ந்து திருமணப்பத்திரிகைகளை எழுதி யெங்கும் அனுப்பினர். மங்கலநாள் நெருங்க நெருங்க விவா கத்திற்கு வேண்டிய பொருள்களையெல்லாஞ் சேகரித் துக்கொண்டு மணமகனை மணக்கோலத்தினால் அழகுறும் படி செய்து பருத்த மணப்பேரிகைகள் மிகுத்துமுழங்க காரைக்காலுக்கு மணமகனோடு நிதிபதி முதலியோர் வந்தடைந்தனர்.

இங்ஙனம் இவர்கள் வந்து சேர்தற்குமுன்னரே தனதத்தர் தமது அருமைப்புதல்வியார் திருமணத்தை முன்னிட்டுப் பலவகையாக அலங்கரிக்கலாயினர். என்றுந்தூய்மையாய் இருக்கும் மாடமாளிகைகளை யெல்லாம், இம்மங்கலச் சடங்கிற்காக மற்றொருமுறை தூசுபோக்கி, தோரணங்கள்கட்டி, துகிற்கொடிகள் தூக்கி, அழகுறச்செய்தனர். எங்குபார்த்தாலும் வாழை களையும் கமுகுகளையும், கரும்புகளையும் நட்டனர். பற் பல இடங்களில் முத்துப்பந்தர்கள் அமைத்தனர். அப் பந்தர்களில் நவமணிகளாலும் ஆகியமாலைகளை அசைந் தாடும்படிக் கட்டினர். அம்மாலைகளின் தோற்றம் வானவில்லை யொத்திருந்தது. எங்கும் அகிற்கட்டை களின் தூபங்களையும், சந்தனக்கட்டைகளின் தூபங்

களையுமிட்டனர். வீடுகளின் முற்பக்கத்திலிருக்குந் திண்ணைகளில் எழிலுறப் பூரண கும்பங்களையும், பாலிகைகளையும் அமைத்தனர். வீதிகளிலெல்லாம் தண்ணீர்தெளித்துச் சித்திரங்களமைந்த கோலமிட்டனர். வந்தவர்கள் இன்புடன் தங்கியிருக்க எண்ணிறந்த விடுதிகளை யேற்படுத்தினர். அறுசுவையுண்டியளிப்பதற்கு அன்னசாலைகளையும், உண்ணீர் தருதண்ணீர்ப் பந்தர்களையும், வந்தவர்கள் விரும்பும் பொருள்களை அவ்வப்பொழுது தந்து உபகரிக்கப் படிந்துநடக்கும் பணியாளர்கள் பலரையும் நிறுவினர். இவ்வண்ணம் தனதத்தனார் தமது நகரத்தையும் மாடமாளிகைகளையும் அலங்கரித்ததோடு திருமணத்திற்கு வேண்டிய பொருள்களையுஞ் சித்தஞ்செய்தனர். பின்னர் மணமகன் முதலியோர் காரைக்கால் அணுகியது தெரிந்து தம்மவர்களும் நண்பர்களும் சூழ்ந்துவர எதிர்கொண்டு அழைப்பாராயினர்.

திருமணஞ் செய்தற்குக் குறிப்பிட்ட நாழிகையு நெருங்கிற்று. சிவிகைகளிலும், வண்டிகளிலும் மற்றும் வாகனங்களிலும் பலர்வந்து குழுமினர். ஆடவர்களெல்லாம் தங்கள் தங்கள் நிலைமைக்கு ஏற்றவாறு அழகுற ஆடை அணிகளை அணிந்துகொண்டனர். மாதர்களில் சிலர் முத்து அணிகளை அணிந்தனர். வேறுசிலர் வைரங்களால் ஆகிய அணிகளை அணிந்தனர். மற்றுஞ்சிலர் நவமணிகளாலும் ஆகிய நல்லணிகளை யணிந்தனர். ஒரு சிலர் ஒருவகைத்தான அணிகளை அணிந்துகொண்டு ஆடியில் பார்ப்பர். இவைகள் வேண்டாம், வேறுசிலவற்றை யணிந்துகொள்வோம் என்று வேறுவகைத்தான அணிகளை அணிந்துகொண்டு ஆடியில் பார்ப்பர். இவை

களும் வேண்டாமென்று வேறு சிலவற்றை அணிந்து கொள்வர். எந்த அணிகலனை அணிந்துகொண்டால் அழகாயிருக்கும் என்று ஆலோசித்து, ஆலோசித்து காலத்தைக் கழிப்பார் சிலர். தூங்குங் குழவிகளைத் தூக்கி, முகங்கழுவித் திலகமிட்டு பொட்டுமிட்டு கூந்தல் திருத்தி கோதைசூடி உடையுடுத்து உண்பொருள் தந்து உவப்புடன் கலியாண மண்டபத்துக்கு அழைத்துச் செல்வார்கள் சிலமாதர்கள்.

இவ்வாறு ஆடவர்களும் மாதர்களும் அழகுற அலங்கரித்துக்கொண்டு, மணமண்டபத்தைச் சேர்ந்தனர். ஆண்மக்கள் ஒருபால் அமர்ந்தனர். பெண் மக்களில் சிறுமியர் ஒருபக்கத்திலும், முதியோர்கள் ஒருபாலும் வீற்றிருந்தனர். பலவகைத்தான வாச்சியங்களும் முழங்கின. மணமகனும் மணமகளும் மண வறையை வந்தடைந்தனர். அம்மணவறையில் வயிர மணித்தூண்கள் வரிசையாய் நிறுத்தப்பெற்றிருந்தன. அத்தூண்களின்மேல் நீலப்பட்டாலாகிய மேற்கட்டி கட்டப்பெற்றிருந்தது. மேற்கட்டியின்மேல் மாலைகளால் அலங்கரிக்கப்பெற்ற கலசங்கள் வைக்கப்பெற்றிருந்தன. அம்மேற்கட்டியின் கீழ் முத்துப்பந்தரிடப்பெற்றிருந்தது. கண்டோர்கண்களை கவரும் மணப்பந்தரினடியில் மணமக்கள் வந்தடைந்தவுடன் செய்யவேண்டிய சடங்குகளைத் தங்கள் குலாசாரத்துக்கேற்பச் சிறப்பாய் ஒன்றன்பின் ஒன்றாகச் செய்தனர். வயது முதிர்ந்த பெரியோர்கள் அச்சடங்கு ஆயிற்று இச்சடங்கு ஆயிற்று வென்று அடிக்கடி நினைப்பூட்டிக்கொண்டிருந்தார்கள். சிறுமியர்களில் சிலர் மணமகனை நோக்கி கட்டழகுடையவன் இவனே என்றார்கள். மற்றுஞ்சிலர் நம்மாதரசி

யாகிய மணமகளே அழகுடையவள் என்றார்கள். வேறு சிலர் இத்தகு நங்கையை பெறுவதற்கு நம் காரைக்கால் என்ன தவஞ்செய்ததோ வென்றார்கள். காரைக்கால் தவஞ்செய்ததைவிட இக்கன்னியாளை தகைக்காணும் நாமே தவஞ்செய்தவர்கள் என்றார்கள். சிலர் ஒன்றும்பேசாது நடக்குஞ் சடங்குகளை உற்றுக் கவனித்தார்கள். நல் முகூர்த்த நேரமும் நெருங்கிற்று. தனதத்தனும் பரமதத்தனார் கரத்தில் தண்ணீரை வார்த்தனர். பரமதத்தனும் அந்நீரை அன்புடன் ஏற்றனர். முரசங்கள் முழங்க மத்தளங்கள் அதிர சங்குகள் நாதஞ்செய்ய, வந்திருந்தார் அனைவரின் வாழ்த்தொலியோங்க மென்னகையையுடைய மயிலனைய புனிதவதியார்க்கும் காளையனைய பரமதத்தனார்க்கும் திருமணம் நிறைவேறிற்று. ஓமத்தீயை வலம் வந்தனர். அம்மி மிதித்தனர். அருந்ததி கண்டனர். மற்றுஞ் செய்யவேண்டியவன வற்றையுஞ்செய்து முடித்தனர். இவ்வாறு திருமணம் நிறைவேறியபின்னர், மாதவர்களையும் பெற்றோர்களையும் பெரியோர்களையும் வணங்கினர். புனிதவதியார் தன் காதலனைக் கண்ணிலும் நெஞ்சிலும் பிரியாது கூடியிருப்பாளாகவென்றும், இவள் காதலனும் இவளை அவ்வாறே கொள்வானாகவென்றும் ஆசிகூறினர்.

அனைவர்க்கும் அறுசுவையொடு உண்டியளித்தனர். ஆடைகளையும் அணிகலன்களையும் அளிக்கவேண்டியவர்களுக்கு அம்மையாரின் தந்தையார் அளித்தனர். உண்டி கொண்டபின்னர் இன்பந்தருநிகழ்ச்சிகள் பல நிகழ்ந்தன. ஒருபுறத்தில் இன்னிசைவலார் ஒருங்கு கூடி இன்னிசை இசைத்தனர். ஒருபுறத்தில் ஆடலில்வலார் தங்கள் ஆடுந்திறனைப் புலப்படுத்தினர். ஒருபுறத்தில்

நூல்வலார் நூல்களின் நுண் பொருள்களை யெடுத்து விரித்தனர். மாதர்களில் சிலர் அம்மானை யாடினர். வேறு சிலர் கழங்காடினர். மற்றுஞ்சிலர்பந்துகொண்டு ஆடினர் மணமகளோடும் மணமகனோடுஞ் சிலர் உரையாடிக் கொண்டிருந்தனர். இங்ஙனம்காரைக்காலில் அம்மையாரின் திருமணம் கவினுறுதிருவிழாவைப்போன்று நிறைவேறியது.

# 5. இல்லறம்.

இவ்வாறு மங்கலவிழா நிறைவேறிய பின்னர் கணவனும் மனைவியும் காரைக்காலில் இனிது வீற்றிருந்தனர். தனதத்தனருக்குப் புனிதவதியார் ஒரே புதல்வி யாதலால் அவ்வம்மையாரைப் பிரிந்திருப் பதற்கு மனமிசையவில்லை. ஆனால் அவ்வம்மையாரை யும் அவர்கள் நாயகனாரையும், என்றைக்கும் தமமுடைய மாளிகையிலேயே இருத்திவைப்பதற்கும் எண்ணவில்லை. மணமுடிந்த நங்கையரைக் கணவனோடு அனுப்பாது தம் முடைய மனையிலேயே இருத்திவைப்பது ஒழுங்கன்று. அங்ஙனமே மங்கைக்கு மணவாளனும் மாமனார் அகத் திலேயே நீண்டகாலம தங்கியிருப்பதும் தகுதியன்று.

மிக்க வெஞ்சமரக் கிடை வெருவி யோடினா
ஒக்கநாள் புறத்தனி யுலவிவாழுநா
புக்கும்வட் டகத்தினி லுண்ணும புன்மையோர்
மக்களுட பதடியெனா முறைக்கும் வையமே.

அதிவீரராமபாண்டியன்.

ஆதலால் தனதத்தனார் தனது புத்திரி தன் கணவ னோடு நாகப்பட்டினத்திற்குப் போகாமல் காரைக்காலி லேயே தங்கியிருப்பதற்கு ஏற்றவாறு எவ்வகை வசதி களோடுங் கூடிய மாளிகையொன்று அமைத்தனர். அம் மாளிகையில் வேண்டிய பொருள்களை யெல்லாம் அமைத்து, அதில் தனது புத்திரி தம் கணவனோடு இனிது இல்லறம் நடத்தும்படி ஏற்படுத்தினர்.

தனதத்தனார் தனது புத்திரியின் மணங்காரணமாக அளவில் பொருளை நன்கொடையாக பரமதத்தனருக்கு ஈந்தனர். அப்பொருளைப்பெற்ற பரமதத்தனார் அம்

மட்டோடு திருப்தியடைந்திடவில்லை. பிறர்பொருளால் வரும் இன்பம் எவ்வளவு பெரிதாயினும் அதை இன்பம் என்று கொள்ளார் அறிவுடையார். தம் முயற்சியால் வரும்பொருளால் உண்டாம் இன்பம் எத்துணைச் சிறிதாயினும் அஃதே மேலான இன்பம் என்று சொல்வர் மேலோர். யாவர்க்கும் உதவியாயிருக்கும் இல்லறத்தை இனிது நிறைவேற்ற வேண்டுமென்ற பெரு நோக்கமுடைய தனத்தனார் தமது மனைவியாரின் தந்தையார் தந்த பொருளோடு அமையாது மேன்மேலும் பொருளீட்டவேண்டு மென்று முயற்சியில் முற்பட்டார். பொருளை யீட்டுவதற்குப் பல வழிகளுண்டு. அவ்வழிகளை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒரு பிரிவில் முயற்சி மிகுதியாயிருக்கும். வரும் ஊதியமோ குறைவாயிருக்கும். மற்றொரு பிரிவிலோ முயற்சி குறைவாயிருக்கும். வருவாயோ மிகுதியாயிருக்கும். சிலவற்றிற்கு உடல் உழைப்பு அதிகம்வேண்டும். வேறு சிலவற்றிற்கு அறிவின் கூர்மை அதிகம்வேண்டும். உலகில் ஒருவன் வேறு வழிகளில் ஈட்டும் பொருளைவிட வாணிகவழியில் தான் அதிக பொருளை யீட்டல்கூடும். இம்முடிபு அன்றும் இருந்தது, இன்றும் இருக்கின்றது, என்றும் இருப்பதாகும். இக்காலத்திலும் இப்புவியில் அதிக பொருள் படைத்தோர் வணிகர்களே. ஆதலால் பரமதத்தனும் தம் குல ஒழுக்கத்திற்கு ஏற்றவாறு வணிகத்துறையில் இறங்கி வளந்தருபொருளை மிகுதியாய்க் குவித்தனர். இவர் பொருள் குவித்ததெல்லாம் தனது இச்சையை நிறைவேற்றிக் கொள்வதற்கன்று. பிறர்க்குதவி, தானுந் தன் குடும்பத்தாருமுண்டு மகிழ்வதற்கேயாம். எவ்வளவுதான் பொருள் பெறினும்

இல்லறத்தை இனிது நிறைவேற்றுவிடின் அப்பொரு ளாலாய பயனென்றுமில்லை.

அறமென்பது இல்லறம் துறவறமென இருவகைப் படும். இல்லறம் துறவறத்தைவிடச் சிறந்ததாகும். 'இல்லறமல்லது நல்லறமன்று' என்றார் பெரியார். மனத்தையும் ஐம்பொறிகளையும் அவித்தடக்கி துறநெறிக்கண் சென்றடையும்பயனை அவற்றை அவித்தடக்காது? ஐம் புல இன்பங்களை யாரதுய்த்து, இல்வாழ்க்கையினு லடையக்கூடுமாதலால் இல்லறமே மற்றதைவிட எளிதும் மாட்புடையதுமாகும். இல்லறத்தோடு கூடி வாழ வேண்டிய இயல்போடு வாழ்பவன் இவ்வுலகத்தவனு யிருப்பினும் அவன் உயர்வுடை தேவர் கூட்டத்தவருள் ஒருவனாக வைத்து எண்ணப்படுவான்.

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்'' திருவள்ளுவர்.

இத்தகைய சிறப்பினையுடைய இல்லறம் இல்லாளது நலங்களால்தான் விளக்கமுறும். இல்லாள் நற்குணமும் நற்செய்கையு முடையவளாயிருத்தல் வேண்டும். நற் குணங்களாவன: பற்றற்றுத் துறந்தவர்களைப் போற்று தல் விருந்தினர்களை உபசரித்தல், வறிஞர்களிடத்தில் இரக்கங்காட்டுதல், உறவினரிடத்து அன்புமிகல், முதலி யனவாம். நற் செய்கைகளாவன: வாழ்க்கைக்கு வேண் டும் பொருள்கள் இன்னவென்று அறிந்து உணர்தல், சமையல் செய்யும் தொழிலில் சாமர்த்தியம் பெற்றிருத் தல், பிறர்க்கு உபகாரஞ் செய்தல் முதலியனவாம். இத்தகைய சீரிய குணங்களும், செய்கைகளும், பெற் றுள்ள நன்மனையாள் தன் நாயகனோடு ஒத்து வாழ்ந் தால்தான் இவ்வாழ்க்கை இன்பமுடைத்தாகும். இல்

லறம் என்பது தருமம் என்றும் பண்டத்தை யேற்றிய ஒரு வண்டியாகும். அவ்வண்டிக்குக் கருமம் என்பது நுகத்தடியாகும். அந்நுகத்தடியைக் காதலியும் காதலனுங் கைக்கொண்டு ஒத்து இழுத்தால் அவ்வண்டி வேண்டிய தூரஞ் செல்லும். அங்ஙனமின்றி ஒருவர் மாத்திரங் கைக்கொண்டிழுத்தால் சிறிது தூரங்கூடச் செல்வது அரிதாகும்,

"மருவி யகாதன் மனையாளுந் தானு
மிருவரும் பூண்டேர்ப்பி னல்லா—லொருவரா
லில்வாழ்க்கை யென்று மியல்புடைய வான்சகடஞ்
செல்லாது தெற்றிற்று நின்று." அறநெறிச்சாரம்.

கண்கள் இரண்டாக இருப்பினும், அவைகள் எவ்வாறு ஒரேபொருளை உற்று நோக்குகின்றனவோ, அவ்வாறே இல்வாழ்க்கைக்கு இருகண்போன்ற நாயகனும் நாயகியும் கருத்தொருமித்து ஒன்றையே சிந்தித்தல் வேண்டும். உடல் இரண்டாயும் உயிர் ஒன்றாயு மிருத்தல் வேண்டும். காதலனுக்கு வரும் இன்பதுன்பங்களே காதலிக்குமுரியனவாம். காக்கையின் இரண்டு கண்களுக்கும் மணி ஒன்றாயிருப்பதுபோல் இருவருக்கும் குறிப்பு ஒன்றாகவே இருக்கவேண்டும்.

"காகத் திரு கண்ணிற்கொன்றே மணிகலந்தாங் கிருவ
ராகத்துளோ ருயிர்கண்டனம் யாமின்றி யாவையுமா
மேகத்தொருவ னிரும்பொழிலம் பலவன்மலையிற்
றோகைக்குந் தோன்றற்கு மொன்றாய் வருமின்பதுன்
பங்களே"] மணிவாசகர்.

மேற்கூறிய இயல்புகளெல்லாம் இவ்விருவரும்வாய்க்கப்பெற்றனர் முற்செய்தவத்தாலோ. [புனிதவதியாரோ தமது காதலன் கருத்துக்கிசைந்து அவரோடு இல்லறத்தை இடையூறின்றி நடத்தத்தலைப்பட்டனர். இவ்வாறு

இல்லறத்திற்சிறந்து திகழும புனிதவதியார் தமது நாயகன்பால் எவ்வளவு அன்பு கொண்டிருந்தனரோ அவ்வாறே இறைவனிடத்தும் இடையறு அன்புகொண்டு விளங்கினர். கொண்ட கணவன் சொற்படி நடத்தலே கற்பாகும். அவ்வாறே இறைவனருளிய வேதாகமங்களிற் கூறிய ஒழுங்கின்படி நடத்தலே இறைவனிடத்தில் காட்டும் கற்பாகும் இவ்வுண்மையை உணர்ந்த அம்மையார் தமது கணவனிடத்தில் எங்ஙனம் காதல்கொண்டு ஒழுகினரோ அங்ஙனமே இறைவனிடத்துங் காதல்கொண்டு தங்கணவன் ஆணையைவகித்து ஒழுகினர். ஈண்டு கவனிக்கத்தக்கது ஒன்று உண்டு. வீட்டில் நாயகனாய் விளங்கும் கணவனிடத்தில் அன்புஇன்றி. அவன் கூறுமொழிகளைப் போற்றுது, இறைவனிடத்தில் அன்பு பூண்டு ஒழுகுகின்றேன் என்று வீண்மொழிகளைப் பகரும் பேதையரிடத்தில் ஆண்டவன் அருள் சுரப்பதில்லை. அகமுடையானிடத்தில் அன்புதோன்றுதவழி ஆண்டவனிடத்தில் எங்ஙனம் அன்பு தோன்றும். அவர் கூறும்மொழிகள் ஆரவார மொழிகளே. வீடுத் தெய்வமாகிய புருடனைப் புறக்கணித்துவிட்டு ஊர்ஊராய்த்திரிந்து ஆலயங்கடோறும் அலைந்தலைந்து ஆண்டவனருளைப் பெறுகிறேன் என்று புறப்படும் அறிவிலிகளை நோக்கி ஆண்டவன் அன்னோர் படிறவொழுக்கத்தைஎள்ளி நகுகின்றான் ஆதலால் ஆண்டவன் இன்னருளைப்பெற எண்ணுகின்றவர் முதலாவதாகத் தங்கள் வீட்டுத்தெய்வத்தின் பால் பக்தியொடு ஒழுகி அத்தெய்வத்தின் அருளைப்பெறல் இன்றியமையாததாகும்.

'தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழு தெழுவாள
பெய்யெனப் பெய்யும் மழை' திருவள்ளுவர்.

புனிதவதியம்மையார் இல்லறம் நடத்தும்பொழுது நம்பர் அடியார்களை அன்புடன் உபசரிப்பார்கள். அடியார்கள் வந்தால் அவர்கள் வேண்டுவன என்னவென்று உணர்ந்து மிக்க களிப்புடனும், அன்புடனும், அப்பொருள்களை ஈந்துவந்தார்கள். சிலர் பசியோடு வந்தக்கால் அவர் பசிப்பிணியை நீக்கும் பொருட்டு நல்ல அமுது அளித்தனர்.

இக்காலத்தில் பெரும்பாலர் பிறர்க்கு உணவு அளிக்கும் தன்மையைப்பற்றிக் கூறவேண்டியதில்லை. சிலர் பிறர் போற்றவேண்டுமென்று அளிப்பர். சிலர் பழைய உணவுப் பொருள்களைச் செலவிடுவதற்காக பிறர்க்களிப்பர். மற்றுஞ்சிலர் வேறுவேறு காரணங்களைக்கொண்டு அளிப்பர். இந்நோக்கங்களோடு அளிப்பதெல்லாம் வீண் ஆரவாரமாகும். இவ்வாறன்றி அடியார்களுக்கு அன்புடன் அன்னமிடுதல் நமதுகடமையென்று உணர்ந்து கொடுப்போர் ஒருசிலரே. புனிதவதியம்மையார் உணவு கொடுப்பதில் எங்ஙனம் உண்பதற்கேற்ற உணவைக் கொடுத்து உதவினரோ அங்ஙனமே உடை முதலியவைகள் அளிப்பதிலும் ஊக்கங்கொண்டிருந்தனர். கிழிந்து பழுதுபடாத நல்ல உடைகளையும், பசும் பொன்னையும், ஒன்பது வகையான மணிகளையும், உவப்புடன் நாயகன் ஏவியவாறு தொண்டர்களுக்கு அளித்து வந்ததோடு உமைபாகனிடத்தில் உணர்வெலாஞ் செலுத்தி உள்ளங் கசிந்து உருகி வந்தனர்.

அம்மையார் இவ்வாறு நல்லறங்களை இயற்றி வருகையில் பரமதத்தனும் உத்தம குணங்களும நற்செய்கைகளும் கைவரப்பெற்றவராகி பாங்குடைய நெறியின் கண்ணே படர்ந்து வரலாயினர்.

பரமதத்தனார் ஒருநாள் கடையிலிருந்து வாணிபம் நடத்திவரும் பொழுது சிலர் அவரைக் காண்பதற்கு வந்தனர். வந்தவர்கள் வெறுங் கையோடு வராது இரண்டு மாங்கனிகளைக் கொண்டுவந்து பரமதத்தனாரிடம் தந்தனர். இம்மாங்கனிகளை அவர்கள் கொண்டு வராதிருப்பின் இச்சரிதைக்குத்தான் ஏது வழி? அம்மாங்கனிகளன்றோ அம்மையாரின் புகழை உலகிற்கு வெளிப்படுத்தியவைகள். பரமதத்தனார், வந்தவர்கள் தம்மால் விரும்பியவற்றை முடித்துவிட்டு அக்கனிகளைக் கொண்டுபோய் வீட்டில் கொடுக்கும்படிச் செய்தார். புனிதவதியார் அக்கனிகளிரண்டையும் தம்கொழுநரால் அனுப்பப்பட்டவை யென்றறிந்து அவைகளைப் பெற்று வீட்டினுள் வைத்தார். வைத்தபின்பு படத்தையுடைய பாம்பை ஆபரணமாக அணிந்த சிவபெருமானுடைய அடியார் ஒருவர் திருவமுதுக்கு மிகுந்த வேட்கையுடன் அவ்வீட்டை வந்தடைந்தார். அம்மையார் வந்த அடியாரின் நிலைமையை உணர்ந்தார். இறைவனது தொண்டரின் பசியைத்தீர்த்து இளைப்பாறச் செய்வேன் என்று எண்ணினவராகி, பாதங்களை விளக்கத் தண்ணீர் அளித்தார். உண்பதற்குப் பரிகலம் இட்டு, நல்லுணவு தந்து உபசரிக்க எண்ணினார்.

விருந்தினரென்னும் சொல்லுக்குப் புதியவர் என்று பொருளாகும். இக்காலத்தில் விருந்தினர் என்றால் சுற்றத்தாரென்று எண்ணுவது பெரும்பாலாரது. எண்ணமாகும். விருந்தினர் இருதிறத்தவராவர். முன்பே ஒருவரைத் தெரிந்து வருவார் ஒரு சிலர். தெரியாது வருவார் ஒரு சிலர் தென்புலத்தார், தெய்வம் ஆகிய இரண்டையுங்குறித்துச் செய்தல் கட்புலனாகாதாரைக்

குறித்துச் செய்தலாம். தன்னையும் தன் சுற்றத்தாரையும் காப்பதெல்லாம் ஈகையின்பாற் படாது. ஆதலால் பிறர்க்குக் கொடுத்தல் என்பது விருந்தோம்பலேயாம். விருந்தினர்களை உபசரித்தலில் கண்ணும் கருத்துமாய் இருத்தல் வேண்டும். விருந்தினர்கள் மிக மென்மையுடையவர்கள். மலர்களில் மிக மென்மையுடையது அனிச்சப்பூ. அவ்வனிச்சப்பூ மோந்தாலன்றிக் குழையாது. ஆனால் விருந்தினர் முகம் வேறுபட்டு நோக்கப் பெறனால் குழைவர். ஆகவே மோந்தால் வாடும் அனிச்சத்தைவிட வேறுபட்டுப்பார்த்தால் வாடும் விருந்தினர் மிக மென்மையுடையவர்களே.

'மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து' — திருவள்ளுவர்

ஆதலால் விருந்தினர்களைத் தூரத்தே கண்டமாத்திரத்தில் இன்முகங்கொண்டு நோக்கவேண்டும். இனிய முகத்தைக் கண்டவுடன் அவ்விருந்தினர்கள் நெருங்கி வருவார்கள். அவ்வாறு வந்தவிடத்து இன்சொல் வழங்குதல் வேண்டும். அவ் வின்சொல்லைக் கேட்டு அணுகிவருவார்களாயின் இனிய செயல்களைப் புரிதல் வேண்டும். விருந்தினர்களை உபசரிக்கவேண்டிய முறை இத்தன்மையதென்று ஆன்றோர் கூறுவர்.

அங்ஙனம் உபசரிக்கப்பெறும் விருந்தினர்களுக்குள்ளே தலைசிறந்து நிற்பவர் சிவனடியவரேயாவர். அடியார் பக்தியே ஆண்டவன் பக்தியென்று கூறப்படும். அடியார்களுடைய குலம் குணம் முதலியவைகளை யாராயாது அவரிடத்தில் அன்பு காட்டுவதுதான் தன் கடமையென்று உணர்ந்து புரிகின்றவரே மேலோராவரென்று நூல்கள் கூறுநிற்கும்.

"சங்கநிதி பதுமநிதி யிரண்டுந்தந்து
தரணியொடு வானாளத் தருவரேனு
மங்குவா ரவர்செல்வம் மதிப்போமல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லராகி
வங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயரா
யாவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தாக் கன்பராகி
ரவரன்றே யாம்வணங்குங் கடவுளாரே

திருநாவுக்கரசர்.

இங்ஙனம் மேம்பட்ட விருந்தினரை உபசரிப்பதில் அன்புமிகுந்த அம்மையார் அடியார் உண்பதற்குப் போசன பாத்திரம் இட்டனர். அப்பொழுது அன்னம் மாத்திரம் பாகமாயிருந்தது. வேறு கறியமுதுகள் பாகம் பண்ணப்படவில்லை. அவ்வாறு இருப்பினும் அடியவருக்கு அமுதூட்டுவதைவிட உயர்ந்த பேறில்லை என்ற உறுதியைக்கொண்ட அம்மையார் அடியவர் பசியைப் போக்குவதற்கு முற்படலாயினர். தம்முடைய கணவன் வைத்திருக்கும்படி ச் சொல்லிக் கொடுத்தனுப்பிய நல்ல மதுரமாகிய மாங்கனிகளில் ஒன்றை அதிக விரைவில் எடுத்துக்கொண்டுவந்து, அன்னத்துடன் அடியாரது உண்கலத்தில் அம்மையார் படைத்து அவ்வடியவரை உண்ணும்படி உபசரித்தனர்.

பிறருடைய பசியைப் போக்குவதைவிட பெரும் புண்ணியம் வேறொன்றுமில்லை. இஃது எக்கொள்கையினரும் ஒருங்கே ஒப்புவதாம். உலகில் பசியைவிடக் கொடியதாக வருத்துவது பிறிதொன்றுமில்லை. அது உயர்ந்தோரைத் தாழ்ந்தோராக்கும். நற்குணமுடையாரைத் தீக்குணமுடையவராக்கும். வன்மையாளர்களை மென்மையாளர்களாக மாற்றும். ஒருவர்க்குரிய எல்லா

நன்மைகளையும் அழிக்கும் தன்மை யுடைத்தாதலால் இதை அழி பசியென்றும் இவ்வுடம்பினின்றும் ஞான வொழுக்கங்களை அழித்துத் துன்பந்தருதலான் தீப்பிணி யென்றும் ஆன்றோர் கூறியுள்ளார்

"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉ
நாணணி களையு மாணெழில் சிதைக்கும்
பூண்மாதரொடு புறங்கடை நிறுத்தும் பசிப்பிணி"

கூலவாணிகன் சாத்தனார்

வந்த அடியவர் அம்மையார் இட்ட அமுதை உண்டு களைப்பாறி அம்மையாரைப் பலவகையாகப் புகழ்ந்து சென்றபின், வீட்டிற்குத் தலைவராகிய பரமதத்தனார் வந்து வளம் பொருந்திய வீட்டினுள் புகுந்தனர். அமுது நீராய, பின் முடிக்கவேண்டியவைகளை முடித்துக் கொண்டு, உணவு உண்ணுமிடத்தையடைந்து, உணவை விரும்பி யுண்ணத் தலைப்பட்டனர். அம்மையாரும் பக்கத்தே இருந்து உண்ணுவிக்க வேண்டிய முறைப்படி உண்பித்தார். மனைவி கணவனுக்குச் செய்ய வேண்டிய இன்றியமையாக் கடமைகளில் இஃதொன்று. கணவன் உண்ணுங்காலத்தில் உடனிருந்து உபசரிக்கவேண்டும். ஏவலாளரைக் கொண்டேனும், பிறரைக் கொண்டேனும் கணவனை உபசரித்தல் கற்புடைய நங்கைக் கழகல்ல. புனிதவதியார் பொற்குவியல் நிரயப் பெற்றவராயிருந்தும் தம்முடைய கடப்பாட்டிலிருந்து சிறிதும் நழுவினாரில்லை.

இங்ஙனம் அன்னம் கறிகள் முதலியவைகளை முறையே படைத்து அவரை உண்பிக்குஞ் சமயத்தில் முன்பு கணவன் அனுப்பிய நல்ல மதுரம் வாய்ந்த மாங்

கனிகளில் எஞ்சியிருந்த ஒன்றைக் கொண்டுவந்து உண் கலத்தில் இட்டார். கணவனும் அக்கனியை யுண்டனர். அதன் இனிய சுவையில் அழுந்தினவராகி அக்கனியோடு திருப்தியுறவில்லை. அவர் தமது மனைவியாரை நோக்கி இன்னுமொரு பழமுண்டு, அதனைக் கொணர்ந்து இடுக என்றார். அம்மையாரும், அக் கனியைக் கொண்டு வருவார்போல் அங்கிருந்து நீங்கினார். அவ்விடம் விட்டு நீங்கின அம்மையார் சிறிது நின்று அயர்வுறுவர். இரண்டு கனிகளையும் முன்னமே வழங்கிவிட்டனர். இப்பொழுது என் செய்வார்? கருத்தறிந்து முடிப்பானும், வேண்டுவோர் வேண்டுவதையெல்லாம் தரவல்லவனும், மெய்மறந்து நினைந்த இடத்தில் உதவுவனுமுள்ள சிவபெருமானின் திருவடிகளை மனத்திற் கொண்டு உணரலாயினர். அங்ஙனம் மனவொற்றுமையுற்று உணர்ந்த மாத்திரத்தில் சிவபெருமானுடைய திவ்வியதிருவருளால் அதிமதுர மாங்கனியொன்று அம்மையார் கையில் வந்து தங்கிற்று. மனம் ஒன்றித் தொண்டர்கள் தொழுதால் கைகூடாதது உண்டோ? அக்கனியைக் கொண்டுவந்து கணவனது உண்கலத்தில் களிப்புடன் இட்டனர். கணவனும் அக்கனியை யுண்டு அமுதின் உருசியைவிட அதிகமாயிருக்கக் கண்டனர். 'முன்புதந்த மாங்கனியைப்போன்றதல்ல; மூன்று உலகங்களிலும் பெற்றகரிதாயிருக்கின்றது. இதைப் பெற்ற விதம் எங்ஙன'மென்று மனைவியை நோக்கிக் கேட்டார். அம்மொழிகளைக்கேட்ட அம்மையார் தம்மை யாளுடையாராகிய அருளுடைய பெருமானார் தம்பால் காட்டியுள்ள கருணைத்திறததைக் கூறும் தரமன்றென்று உரை செய்யமாட்டார். கைவந்துள்ள கற்பின் மார்க்கத்தால்

கணவன் கட்டளையைக் கடத்தல் உண்மை நெறியல்ல வென, நடந்ததைக் கூறாமலும் இருக்கமாட்டார். என் செய்வார்? நடுக்கங் கொள்வார். இது தலையாய பெண்களுக்குள்ள பெருங் குணமன்றோ? பெண்கள் ஒன்றை யுணர்ந்தும் உணராது போன்றிருத்தலும், தங்கள் பெருமிதத்தை வெளிக்குத் தோன்றாது அடக்கிவைத் திருத்தலுமன்றோ மடம் என்று கூறுவர். சிலர் மடம் என்ற மொழிக்கு அறியாமை யென்று பொருள்கூறி அறியாமை அரிவையர்களுக்கு உரித்தென்று கூறுவர். அங்ஙனம் பொருள்கூறிப் பெண்மக்களை அறியாமைக் குட்படுத்துவது அடாததாகும். மடவாருள் சிறந்த மடவாராகிய அம்மையாரும் தம்முடைய பெருமிதத் தைக் கணவன்பால் வெளியிடுதற்குச் சிறிதஞ்சினர். கணவன் கேட்டகாலத்தில் விடை கூறாதிருப்பதை விட கற்புடைய நங்கைக்குச் செயல்வேறொன்றில்லை யென் றுங் கலங்கினர். இவ்வாறு கலக்கங்கொண்டு தியங்கிய அம்மையார் பின்பு ஒருவாறு மனந்தெளிந்தனர். நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறே கூறுவது கடன் என்று உணர்ந்தார். அங்ஙனஞ் செய்தலே சிறந்த ஒழுக்க மென்று உறுதியுடையவராகி, அக்கனி வந்தவாறு எங்ஙனம் என்று வினவிய கணவற்கு, இருள் நிறைந்த நீல கண்ட முடைய பரம்பொருளின் செவ்விய அடிகளைச் சிந்தையுறவணங்கி, நேர்ந்ததை நேர்ந்தவாறே யெடுத் துக் கூறினர். அம்மையார் மனதில் வாதுற்ற விஷ யங்கள் இரண்டு. அவையாவன: மடமும் வாய்மையும். வாய்மை மற்றெக்குணங்களிலும் சிறந்த குணமாகும். புற அழுக்கை நீர் போக்குவதுபோல் அக அழுக்கைப் போக்குவது வாய்மையாகும். ஒருவற்குப் புறந்தூய்மை

மாத்திரம் போதியதல்ல. அகந்தூய்மைதான் இன்றி யமையாது வேண்டப்படுவதாகும். மனந்தூய்மையின்றி செய்யப்படும் செயல் எதுவும் வீண் ஆரவாரமாக ஒழியும். மனது தூய்மையாயிருத்தலே எல்லா அறமு மாகும். புறந்தூய்மையாயிருத்தல் இவ்வுடல் நிற்குங் காறும் இன்பத்தைப் பயக்கும். அகந்தூய்மையோ இம்மையிலும் மறுமையிலும் இன்பம் பயக்கும். இது பற்றியன்றோ ஆன்றோர்கள் வேறு எதை இழந்தாலும் இதை இழத்தலாகாது என்று எண்ணி உறுதியாய் இவ் வொழுக்கத்தைக் கொண்டனர். முடியுடைய மன்னன் ஒருவன் இவ்வொழுக்கத்திற்காகவன்றோ தன் னாடு நக ரங்களைத் துறந்தனன், மனைவியையும் அடிமைப்படுத் தினன். தானும் அடிமைப்பட்டுச் சுடலை காத்தனன். இறுதியாய் தன் பெறற்கரும் மனைவியைத் தன் கரத்தா லேயே வெட்டுவதற்கும் வாளைத் தூக்கினன். வாய்மை யின் மேன்மையாலன்றோ இங்ஙனமெல்லாம் செய் தான்.

"பதியிழந்தனம் பாலனையிழந்தனம் படைத்த
நிதியிழந்தன மினிநமக்குளதென நினைக்குங்
கதியிழக்கினுங் கட்டுரையிழக்கிலே மென்றார்
மதியிழந்துதன் வாயிழந்தருந்தவன் மறைந்தான்."

இருளை இரண்டு வகையாகக் கூறு படுத்துவர். அவைகளை அகவிருளென்றும் புற விருளென்றுங் கூறுவர். புறவிருளைப் போக்குவன சூரியன், சந்திரன், தீ முதலியன. ஆனால் அகவிருளோ அவைகளால் போக் கப்படுந் தன்மைத்தன்று. அகவிருளை அறியாமை யென்பர். இவ்வகவிருளாகிய அறியாமையைப் போக்க வல்லது வாய்மையே. முற்கூறிய மூன்றினும் போக்க

முடியாத அகவிருளை வாய்மை யொழிப்பதால் அதைப் பொய்யா விளக்கு என்றார் பெரியார்.

'எல்லாவிளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு' திருவள்ளுவர்.

அம்மையார் உள்ளதை உள்ளவாறே கூறுங் காலத்தும் திரு நீலகண்ட முடைய பெருமான் அடிகளை நினைந்து கூறினரென்றோம். பெரியோர்கள் தாம் செய்யுங்காரியம் எவ்வளவு மேம்பாடுடையதாயிருப்பினுங் கடவுள் துணை கொண்டே செய்வர். ஏனெனில் கடவுள் ஒருவரே கஷ்டங்களினின்றும் விடுவித்துக் காப்பவராவர். அவர் அருள் இன்றி மக்கள் மேற்கொள்ளும் எம்முயற்சியும் முட்டின்றி முடியு மென்று கூறுவதற்கில்லை. ஆனால் முன்னவனே முன்னின்றால் முடியாத பொருள் ஒன்றில்லை. அம்மையார் அதிசயிக்கத்தக்க வகையாய்க் கனியைப் பெற்றார்கள். அக்கனியைப் பெற்ற வகையை வெளியிடுங்கால் அக்கனி தந்தவன் அருளைக்கொண்டு கூறினல் தான், அதனல் வரும் இடர்ப்பாடு ஒழியுமாதலால் அம்மையாரும் ஆண்டவனை வணங்கி அம்மொழிகளைக் கணவனிடத்தில் கூறினர்.

அம்மையாரின் மொழிகளைக்கேட்ட கணவன் மனந்தெளியவில்லை. அதுவும், கடவுளின் கருணையென்று கேட்ட பின்னும் அவர் தெளியாது ஐயங்கொண்டனர். மணம் நிறைந்த மலரைச்சூடியுள்ள அம்மையாரைப் பார்த்து, 'இது கடவுளுடைய கருணையினல் வந்த துண்மையானல் மேலும் ஒரு மதுரக் கனியை அவனருளால் வரவழைத்துக் கொடு' என்று கூறினன்.

அம்மையாரின் மனநிலை வேறு. அவர் கணவனது

மனநிலை வேறு. அம்மையார் தேர்ந்த ஞானமும் தெளிந்த அறிவுமுடையவர். அம்மையாருடைய நெருங்கிய பழக்கப் பரமதத்தனுக்கு வாய்த்திருந்தும் அவர் பக்குவமுறாதவராகவே இருந்தனர். அதனால் தான் அம்மையாரை அடுத்தடுத்து மாங்கனி கேட்க நேர்ந்தது.

அம்மையார் அவ்விடமிருந்து அகன்றனர். பாம்பை அணியாகப்பூண்டு விளங்கும் ஆண்டவனைக் கருத்துள் எண்ணினர். 'மீண்டும் ஒரு கனி தந்தருளவேண்டும், இல்லையேல் என்மொழி பழுதாகு' மென்று பதைத்துருகிக் கூறினர். உடனே அருள் உருவாயன் கனியொன்று புனிதவதியார் கையில் வந்து உறும்படி அருளினர். உடனே அக்கனியைக் கொடுசென்று கணவன் கரத்தில் அளித்தனர். அவனும் அக்கனியை மிக்க அதிசயத்தோடு வாங்கினன். அவ்வணிகரும் கனியைப் புனிதவதியார் தமது கரத்தில் வைத்ததைததான் கண்டார். பின்பு அக்கனியைக் காணவில்லை. கண்ணுற்கண்ட கனியை உடனே காண்பதற்கில்லாமற் போகவே அவ்வணிகரது உள்ளத்தில் அச்சம் உண்டாயிற்று. என்செய்வதென்றுணராது வணிகர் தடுமாற்றமுற்றார். அன்பிற் சிறந்த மனைவியாரை ஓர் அணங்கென்று எண்ணினர். அங்ஙனம் எண்ணியதால் அவரோடு உடன் வாழ்வதற்கு வணிகர் விரும்பவில்லை. விருப்பமில்லையாயினும் அவ்வெண்ணத்தை மற்றவர்கட்கு அறிவியாது மனத்திலேயே சிலகாலம் அடக்கிவைத்திருந்தார்.

## 6. பரமதத்தனார் பாண்டியநாடு புகுதல்.

பரமதத்தன், தம் மனைவியைவிட்டு அகன்றுவிட வேண்டுமென்ற எண்ணம் முதிர முதிர, வணிகன் கடல் மேல் சென்று பொருள் குவித்துவர எண்ணுவதாக உறவினர்களுக்கு அறிவித்தனன். இச்செய்தியைக் கேட்ட கிளைஞர்களும் அதற்கேற்றவாறு நல்ல மரக்கலம் ஒன்று சித்தஞ் செய்தார்கள்.

முற்காலத்தில் நம்மவர்கள் திரைகடல் கடந்து திரவியம் தேடிவந்தனர். 'திரைகடலோடியுந் திரவியந் தேடு' என்பது முன்னோர் மொழியன்றோ? பண்டை நாளில் நம்மவர்கள் நம்நாட்டுப் பொருள்களை மிகுதியாகக்கலங்களில் ஏற்றிச்சென்று பிறநாடுகளில் பண்டமாற்றுதல் செய்துவந்தனர் என்பதையும், கடற்போர் செய்து பகைவரை வென்றனர் என்பதையும் பழந்தமிழ் நூல்களில் பரக்கக் காணலாம்.

புதிய மரக்கலத்தில் பிற இடங்களில் வேண்டப்படும் பொருள்களை ஆராய்ந்து ஏற்றிக்கொண்டும், மரக்கலம் அமைக்குந் தொழிலாளர்கள் சிலரை உடன் அழைத்துக்கொண்டும் பரமதத்தன் வருணனைப் பணிந்து நல்ல நாளிற் புறப்பட்டனன். தான் செல்லக்கருதிய ஊரை யடைந்தனன். சிலகாலம் அங்கிருந்து வாணிபம் நடத்தினான். அளவில்லாத பொருளை யீட்டினான். மீண்டும் அக்கலத்திலேறிப் புறப்பட்டான். புறப்பட்ட அவ்வணிகன் காரைக்காலை வந்தடையவில்லை. நீர்வளம் நிறைந்த கன்னிநாட்டை யடைந்தான். மீனாட்சி கன்னிகையாயிருந் தரசாண்ட காரணம்பற்றிக் கன்னி

நாடென்னும் பெயரையுடைய பாண்டி நாட்டை யடைந்து அங்கு ஒரு நகரிலிறங்கினான். அங்கே இறங்கி தன்னுடைய செல்வமனைத்தையும் ஒருவழி யிற் பெருகும்படிச் சேர்த்தான். சேர்த்து வாணிபஞ் செய்து வருநாளில், அவ்வூரிலுள்ள செல்வத்திற் சிறந்த வணிகனது புத்திரியை மணங்கொண்டான். புதிய மனைவியாரொடு இன்புற்று வாழ்ந்து வருகையில், தான் தனது முன்னைய மனைவியாரைப் பிரிந்த செய்தியை ஒருசிறிதும் வெளிக்கூறாமலிருந்தான். இதற்குப் பலகாரணங்களுண்டு. ஒருவன் தன மனைவியைப்பிரிந்து, அவளைத் தனியேயிருக்கச் செய்துவிட்டு தான் தனியே சென்று வேறு ஒருத்தியை மணம்புரிந்து கொள்ளுதல் மிகக்கொடிய செயலாம். மனைவியானவள் தன்னை யீன்றெடுத்த தாய் தந்தையரை யெல்லாம் பிரிந்து, கணவனையே தஞ்சமென்று எண்ணிக் காதலித்துவரும் நாளில் அவளைத் தனியே விட்டு பிரிதலை விட அடாதசெயலென்னும்? இங்கு, புனிதவதியாரோ மிக்கத் தூய்மையுடையவர்கள். நிரம்பிய அறிவும் நற்குணவாய்ப்பும் இறைவனிடத்துக் குறையா அன்பும், அப்பெருமானது இன்னருளும், ஒருங்கே வாய்க்கப் பெற்றவர். இத்தகைய பெரியாரைவிட்டுவிட்டு வந்தேனென்று கூறினால் மற்றவர் பல கேள்விகளைக் கேளாமலிருக்க மாட்டார்கள். அவர்கள் வினவும் வினாக்களுக்கெல்லாம் விடையளித்தே தீரல்வேண்டும். விடையளிப்பாராயின் அவர்களுக்குள் நேர்ந்த மறைபொருள்களெல்லாம் வெளியாகும். இவைகளையெல்லாம் எண்ணியே தம்முடைய முன்னைய நிலையைக் கூறாது வணிகன் காலங் கழித்து வந்தனன்.

அந்நகரத்திலுள்ள ஏனைய வணிகர்களோடு பரமதத்தன் பழகிக் குபேரனைப்போன்று பெருநிதியம் படைத்து இன்புற்றிருந்தான். அப்பொழுது அவனது புதிய மனைவியாருக்கும் பெண்மகவு ஒன்று பிறந்தது. குழந்தைக்குச் செய்யவேண்டிய சடங்குகளை யெல்லாம் நிறைவேற்றினன். தான் முன்பு விட்டுப்பிரிந்த மனைவியாரை இடைவிடாது எண்ணுவான். அவ்வம்மையாரைத் தனது குலதெய்வமாகப் போற்றுவான். அவ்வாறு போற்றுவதற்கு அறிகுறியாக தமது அருமைப் புத்திரியாருக்குப் புனிதவதியாரென்றே பெயரிட்டழைத்தான்.

பரமதத்தன் இவ்வாறு இங்கே இல்லறம் நடத்திவருகையில், காரைக்காலில் புனிதவதியாரும் கற்பில் ஒரு சிறிதும் வழாமல், மனையறத்திற்குரித்தான செயல்களில் சிறிதும் குன்றுமல் நடத்திவந்தனர். கணவன் பிரிந்த பின்னர் அவர் மீண்டு வரும்வரை நிற்க வேண்டிய நிலையில் நின்றனர். அழகிய சிவந்த சிறு அடிகளில் சிலம்பு முதலிய அணிகளைப் புனிதவதியார் அணிந்து கொள்ளவில்லை. தன்னுடைய மங்கலத்திற்கு உரித்தான அணியைத்தவிர வேறொரு அணியாலும் அலங்கரித்துக் கொள்ளவில்லை. கண்ணில் மைதீட்டுவதில்லை. புன்னகையென்பதும் ஒழிந்தது. கூந்தலில் வாசனைத் தைலங்கள் பூசிக்கொள்வதில்லை. தம்முடைய கணவனரது வருகையை நோக்கியே கடவுளைப் போற்றிவந்தனர்.

புனிதவதியார் இவ்வாறு தமது கற்பைக்காத்துக் கொண்டுவருநாளில் அவ்வம்மையாரின் சுற்றத்தார்கள், பரமதத்தன் பாண்டிய நாட்டில் ஓர்பதியில் மிகுந்த வளத்துடன் வதிந்து வருவதாகக் கேள்வியுற்றார்கள்,

இம்மொழிகளைக்கேட்ட சுற்றத்தார் உடனே நம்பிவிட வில்லை. தமது உறவினர்களில் சிலரையனுப்பி விசாரித்து வரச் செய்தனர். முன்னர் கேள்வியுற்றது உண்மை யென்று உணர்ந்தனர். என்செய்வார்? மதிமயங்கினார். பரமதத்தரும் இங்ஙனம் புரிவரோஎன எண்ணினர். நிகழத்தகாத செயல் எதனால் நிகழ்ந்தது என்று எண்ணு வர். உண்மையொன்றும் உணர்ந்தாரில்லை. இறுதியாய் ஒருமுடிவு செய்தனர். புனிதவதியாரை அவர் கணவன் இருக்கும் இடத்தில் கொண்டுசேர்ப்பது என்பதேயாம். உடனே மயில்போன்ற சாயலையுடைய புனிதவதியாரை உயர்ந்த மணிகளாலிழைக்கப்பெற்ற சிவிகை யொன்றில் தாங்கிக்கொண்டு ஆடவரும் மகளிருமாகிய சுற்றத்தார் கள் சூழ்ந்துவர சோணாடு கடந்து சென்று பாண்டி நாடு புகுந்தனர். பரமதத்தன் வாழும் பதியையும் அடைந்தார்கள். சிலரைக்கொண்டு பரமதத்தனுக்கு அவர் முதன்மனைவியாரை அழைத்து வந்திருக்குஞ் செய்தியை அறிவித்தார்கள்.

இச்செய்தியைக்கேட்ட பரமதத்தன் மிகவும் அச்சங்கொண்டான். தான் பின்பு மணம்புரிந்து கொண்ட நங்கையையும் அவன் வாயிலாகத்தோன்றியுள்ள பெண் குழந்தையையும் அழைத்துக்கொண்டு முன்னதாகச் சென்று புனிதவதியாரைக் காண்போமென்று புறப் பட்டு வந்தடைந்தனன். புனிதவதியாரைக் கண்டனன். தானும் மனைவியும் குழந்தையுடன் புனிதவதியாரின் அடிகளில் வீழ்ந்து வணங்கினர். வணங்கிய பரமதத் தனர் அவ்வம்மையாரை நோக்கி உம்முடைய கருணை யால் வாழப்பெற்றேன். இப்பசுங்குழவிக்குந் தங் களுடைய பெயரையே இட்டிருக்கிறேன் என்று கூறி

ன்ன். கணவன் வணங்குவதைக் கண்டார் புனிதவதி யார். என்செய்வார்? அச்சங் கொண்டார். சூழ்ந் துள்ள சுற்றத்தாரின் அருகில் அவர் ஒதுங்கி நின்றனர். சுற்றத்தார்களெல்லாம் ஒன்று முணராதார்களாகி வெட்க முற்றூர்கள். பரமதத்தனைப்பார்த்து சிறப்புகளெல்லாம் ஒருங்கே வாய்ந்த உன் மனைவியாரை நீ ஏன் வணங்கு கின்றுய் என்று கேட்டார்கள். உடனே பரமதத்தன் அவர்களைப்பார்த்து பின்வருமாறு அறிவித்தான். இவ் வம்மையார் மானுட கூட்டத்தைச் சார்ந்தவர்களல்லர். நல்ல பெருந்தெய்வமாதலே நானறிந்துள்ளேன். அவர் களின் தெய்வத்தன்மையைக் கண்டுதான் நான் அகன்று வந்தேன். உள்ளவாறே அவர்களை தெய்வமாகக்கருதி யிருப்பதற்கு அறிகுறியாக, அவர்களைப் பிரிந்த பின் னர் பிறந்த இக்குழந்தைக்கு அவர்களுடைய பெய ரையே யிட்டிருக்கிறேன். ஆதலால்தான் இவர்களை வணங்கினேன். நீங்களும் அவர்களை வணங்குங்கள் என்று கூறினுன். கேட்ட வணிகர்களெல்லாம் அதி சயங்கொண்டனராகி வாய்பேசாது நின்றனர். அம்மை யாரும் தன்கணவனுரைத்த மொழிகளைக் கேட்டார். கொன்றைமலரை யணிந்துள்ள செஞ்சடைப் பெரு மானது சேவடிகளைப் போற்றினுர்கள். மனதை யொரு மைப்படுத்தி நுண்ணிய உணர்ச்சியொடு பின்வரும் மொழிகளைக் கூறினர். பரமனே! கணவர் இக்கொள்கை யைக் கொண்டுள்ளார். இவர்பொருட்டு இதுநாள் வரை வனப்புமிகுந்த தசையாலாகிய உடலைத் தாங்கி வந்தேன். எனக்கு இனி அவ்வழகுவாய்ந்த உடல் வேண்டுவதில்லை. தேவரீருடைய திருவடியை யென் றென்றும் போற்றும் பேய்வடிவு அடியேனுக்கு வேண்

டும். என்று உருகிய உள்ளத்தோடு மேற்கூறியவைகளை உரைத்தனர்.

இம்மொழிகளிலிருந்து அம்மையாரது ஞான உணர்ச்சி நன்கு புலப்படும். உடலைத் தம் கணவனுடைய பொருளாகவே எண்ணிப் பாதுகாத்துவந்தனர். தாம் அதில் ஒருவிருப்பமுங் கொள்ளவில்லை. ஏனெனில் உடலின் நிலையாமையையும் அதன் இழிதகைமையையும் நன்குணர்ந்திருந்தனர். ஐம்புலன்களும் ஒன்றோடொன்று ஓயாது சண்டையிட்டுக் கொண்டு கலாம் விளைக்கும் கானகமாயிருப்பது உடல். நல்வினை தீவினையென்ற இரு வினைகளும் வைத்துப் பூட்டப்பட்ட பெட்டகமாயிருக்கிறது. ஆசையாகிய கயிற்றினால் அமைதியின்றி ஆடிக் கொண்டிருக்கும் பம்பரம் போன்றிருக்கிறது. அந்தோ இவ்வுடலின் இழிவை யென்னென்று கூறுவது? அறல் போன்று இருண்டுவிளங்கிய கூந்தல் நாளேற நாளேற பொலிவிழந்து பூளைப்பூவைப்போல் ஆய்விடுகின்றது. கழுநீர் மலரை யொத்திருக்கும் கண்கள் அழுக்குநீரைச் சொரிவதாக மாறுகின்றன. குமிழ மலரையனைய மூக்கு அருவருக்கத்தக்க நீரை உமிழ்கின்றது. முத்தை யனைய பற்கள் சுரையின் வித்தைப்போன்றாய் விடுகின்றன. இங்ஙனமே மற்ற அங்கங்களும் மாறுகின்றன. இவைகளையெல்லாம் நன்கு உணர்ந்த அம்மையார் இவ்வுடலை அருவருத்து ஒழித்தற்கு ஒருப்பட்டனர். உடலைமாத்திரம் அம்மையார் அருவருக்கவில்லை. உடலோடு பொருந்திய குடும்ப வாழ்க்கையையும் காதலிக்கவில்லை. கண்ணுதல் ஒருவனிடத்திலேயே காதல் கொண்டனர். கண்ணுதற் பெருமானே உடலின் கட்டழகை விரும்புவதில்லை. உயிரின் உரமான பக்தியையே விரும்புகின்றார்,

ஆதலால் அம்மையார் தமக்கும் பிறர்க்கும் துன்பஞ் செய்யும் கட்டழகுவாய்ந்த சரீரத்தைக் காமுறவில்லை. பிள்ளைகளைப் போற்றும் பேய்வடிவையே பெரிதும் விழைந்தனர்.

## 7. பேய்வடிவங் கொள்ளுதல்.

புனிதவதியம்மையார் இவ்வாறு வேண்டியவுடனே அம்பலத்தாடும் அரனார் அருள்கூடிற்று. ஞானஉதயம் உண்டாயிற்று. விரும்பியவற்றை அப்பொழுதே பெறவுந் தலைப்பட்டார். சிவபெருமான் ஆன்மாக்களுக்கு இருந்த இடத்திலேயிருந்து ஞான உதய முண்டாக்குவர் என்பது அறிஞர்கள் கொள்கை.

நன்றுடையானைத் தீய இல்லானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிருமே.

ஞானசம்பந்தர்

ஞானம் உண்டாகியவழி அகப்பற்று அழியும். அகப்பற்று அழியவே புறப்பற்றழிவது மிகவும் எளிதாகும். ஆகவே அம்மையார் ஊனால் ஆகிய உடல் வனப்பை யெல்லாம் அருவருத்து உதறினார். உடம்பும் எற்புடம்பாயிற்று. பேய்வடிவமும் பேணிப் பெற்றனர்.

உலகில் தீவினைவயத்தால் பேய்வடிவமுற்றுப் பெரிதும் துன்பத்திற்கு ஆளாவதுண்டு. இறந்த உடலுக்கு ஏங்கி அலைந்து திரியும் பேய்கள் பலவுண்டு, கண்டாரை அச்சுறுத்தி அவர்கள் உயிரைக் கவருங் கொள்கையுடைய பேய்களும் உண்டு. ஆனால் அம்மையார் அவ்விழிதகைப்பேய் வடிவைப் பேணிக் கொள்ளவில்லை. அவர்கள் கொண்ட பேய்வடிவம் அத்தன்மைத்தன்று. மண்ணவரும் விண்ணவரும் ஒருசேர வணங்கும் பேய்வடிவமாகும் அம்மையார் கொண்டவடிவம். மேலோர்கள் வினைக்கு ஈடாகவேண்டுங்கால மளவுந் தான் இவ்

வுடலைப் போற்றிவருவார். வேண்டாக்காலத்து இக்காயத்தைவிட்டு விலகிவிடுவார். உண்ணுவதற்குப் பாத்திரமாக இருந்ததும் இலையே. அதன் உபயோகந் தீருமளவும் கவலையுடன் காத்துவருவது வழக்கம். அவ்விலையில் அன்னமிட்டு உண்டபின்னரோ அதைஎடுத்து வீட்டின் புறத்திலெறிந்துவிடுவது இயற்கை.

> உண்டோர் மிச்சிலொருவருக்
> கொண்ட டேதம் அருவருப் பாதலாற்
> கண்ட மெய்த்தவன் காயந் தனையுண
> முண்ட கெட்டிலை யொப்ப விடுபவனால்

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்.

அதைப்போன்றே யாக்கையையும் ஞானப்பெரியார்கள் துறந்துவிடுவார்கள். இதுபோன்ற நிகழ்ச்சி இதற்குமுன் நேர்ந்ததின்மையால் தேவர்களெல்லாம் மலர் மழை சொரிந்தார்கள். துந்துபி என்ற வாச்சியம் முழங்கப்பெற்றது. தேவர்களும் முனிவரும் இப்பெருஞ்செயலை யெண்ணிப் சிறந்தார் செய்ததையறிந்து கூடிக்குலவிப் பேசிக்களித்தனர். அம்மையார் முன்னின்று இக்காட்சிகளைக்கண்ட பல்கிளைஞரும் அஞ்சி அகன்றனர். அம்மையார் தன்பால் தோன்றி உயர்ந்த ஞானத்தின் உதவியால் உமாநாயகனைப் பல அரிய செய்யுள்களால் போற்றலாயினர். அச்செய்யுள்களைத்தான் அற்புதத் திருவந்தாதியென்று கூறுவார்கள். பின்னர் திருவிரட்டை மணிமாலை யென்ற சிறந்த நூலையும் அருளினார்கள். ஒன்னுதார் மூவெயிலும் ஓரம்பால் எய்த உயர்பொருள் எழுந்தருளியிருக்கும் திருக்கைலையங்கிரியை அடையவேண்டும் என்ற எண்ணம் திருவருட்டுணையால்

தோன்றிற்று. உடனே அங்குச் செல்வதற்கு உரிய மார்க்கத்தில் புறப்பட்டார்.

அம்மையார் பேயுருவந்தாங்கி வருவதை அகிலத்தார் கண்டதிசயித்தனர். மிகவும் அஞ்சினார்கள். இருந்த இடத்தினின்றும் பெயர்ந்தோடத் தலைப்பட்டனர். இதை உணர்ந்த அம்மையார், மக்களின் அறிவின்மைக்கு மிகவும் வருந்தினர். அண்டர் நாயகன் ஒருவனே என்னை அறிதல் வேண்டும். வாய்மையறியா வையகத்தார் அறிந்து ஆவதென், அறியாமலாவதென் என்று கூறிக் கொண்டே வடதிசை நோக்கிப் புறப்பட்டனர். மனத்தினும் கடிதிற் கடந்து சென்றனர். கொன்றை மாலையை அணிந்தும், மூவாய் வேலைக் கையிலேந்தியுமுள்ள கண்ணுதற் பெருமான் திருக்கைலைமலையின் பாங்கரடைந்தனர். உடனே காலினால் அவ்விடத்தில் சஞ்சரிப்பதற்கு அம்மையார் அஞ்சினர். தலையாலே நடக்க எண்ணினர், எண்ணியாங்கே தலையால் நடந்து சென்றனர்.

பெரியார்கள் மற்றைப் பெரியார்கள் திருவவதாரஞ் செய்த திவ்விய இடங்களைக் காலால் தீண்டுவதற்கு மிகவும் அஞ்சுவர். ஆலால சுந்தரராகிய அருட்பெருங் குரவர் ஆளுடையபிள்ளையார் அவதரித்தருளிய சீகாழியை காலால் தீண்டுவதற்கு அஞ்சினர். அடியார் அவதாரஞ் செய்த இடங்களுக்கே இவ்வளவு மகிமையிருக்குமானால், ஆண்டவர் எழுந்தருளியிருக்கும் திருக்கைலையைப்பற்றி என்னென்றுகூறுவது? ஆதலால் அம்மையாரும் அம்மலையை அணுகுவதற்கு மிகவும் அஞ்சித் தலையால் நடக்கத் தலைப்பட்டனர். தலையென்பது அறிவை யுணர்த்துமென்பர், தலையால் நடந்தாரென்றால், பதி ஞானத்தால் நடந்தாரென்றுஞ் சிலர் கூறுவர். தலையினால் நடந்து

சென்று, வெள்ளிமலையின் மேலேறும்பொழுது அம்மையாருக்கு மேலும் மேலும் அன்பு பெருகுவதாயிற்று. அன்பு பெருக்கத்துடன் ஏறிச்செல்லுங்கால் ஐயர் பாகத் தமர்ந்தருளும் அம்பிகையின் அருள் நோக்கைப் பெற்றனர் பெற்றபின்னரே சிவபெருமானது திவ்விய தரிசனத்தைப்பெறலானார்கள். ஆன்மாக்கள் இறைவனது திருவடியின்பத்தைப் பெறுவதற்கு முன்பு, கடக்க வேண்டிய நிலைகள் மூன்று உண்டு. அவைகளை முறையே இருவினையொப்பு, மலபரிபாகம் சத்திநிபாதம் என்று கூறுவார்கள், இவற்றுள் இருவினையொப்பாவது, நல்வினை தீவினையால் வரும் இன்ப துன்பங்களை உவப்பு, வெறுப்பின்றித் துய்த்தலாம். மலபரிபாகமாவது மலங்களை ஒழுங்குபடுத்துதலாகும். அறிவைப் பெறாமல் தடைசெய்துகொண்டிருக்கும் அறியாமையை அடக்குதலாம். இனி, சத்திநி பாதமாவது திருவருட் சத்தி பதிதலாம், அல்லது சத்தி வீழ்தல் என்றுங் கூறுவர். ஆணவமலசத்தி நீங்குதல் என்றுங் கூறுவர். பல காகங்களின் மத்தியில் கல்வீழ்ந்தாங்கு சத்தி வீழ்தலால் ஆன்மா பக்குவப்பட்டு இறைவனது திருவடிப் பேற்றிற்கு உரியதாகுகின்றது. திருவருட்சத்தி பதிதலில்லையேல் பரமனைக் காணலரிது என்பதைப் பின்வருஞ் செய்யுளால் நன்குணரலாம்.

'மாயநட் போரையும் மாயாமலமெனு மாதரையும்
வீயவிட் டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாம்
தாயுடன்சென்று பின் தாதையைக்கூடிப் பின் தாயைமறந்து
ஏயுமே நிட்டை யென்றான் எழிற்கச்சி யேகம்பனே

பட்டினத்தடிகள்.

பார்வதிதேவியார் இச்செயலைக்கண்டு மிகவும் வியப்புற்றார். தமது கணவனாரை வணங்கி, இங்கே தலையால் நடந்து வறிவரும் எலும்பாலமைந்த யாக்கையின் அன்பு யிருந்தவாறு என்னவென்று வினவினார்கள். உடனே, அரவஞ்சூடும் இறைவர் அம்பிகையை நோக்கி, இங்கே வரும் இவள் நம்மை எக்காலத்தும் போற்றுபவள். இவவடிவம் வேண்டுமென்று நம்மைப் பிரார்த்தித்துப் பெறறனள் என்று அருளினர். இச் சமயத்தில அமமையார் நெருங்கி வருவதைக்கண்ட, கண் மூன்றுடைய அண்ணல், 'அம்மையே' என்ற சிறப்புவாய்ந்த ஒப்புயர்வற்ற மொழியால் உலகமெல் லாம் உய்யும்படி அருளிச்செய்தனர்.

## 8. வேண்டுகோள்.

இறைவர் இங்ஙனம் அம்மையே என்று அழைத்த மாத்திரத்தில், அம்மையாரும் உடனே ஆண்டவனைப்பார்த்து 'அப்பா' வென்றழைத்து, அவர்பாதங்களில்வீழ்ந்து எழுந்து வணங்கினார். தடங்கடல் நஞ்சுண்ட தண்ணளியார், அம்மையாரை நோக்கி, வேண்டுவதியாது? என்று வினவினர். அம்மையார் அழியாத இன்பத்திற்குக் காரணமாயிருக்கும் அன்பு வேண்டுமென்றார். வேண்டிய அவர் அத்துடன் நிற்கவில்லை. பின் பிறவாமை அருளவேண்டும் என்றார். ஒருகால் பிறப்பு நேருவதானாலும் இறைவனை மறவாதிருத்தல் வேண்டுமென்றார். அதற்குமேல் மற்றொரு விஷயமும் வேண்டுகின்றார். புண்ணிய மூர்த்தியே! தேவரீர் திருநடனம் செய்யுங்காலத்தில் அடியேன் உன்னடியின் கீழ் மகிழ்ந்து பாடிக்கொண்டிருக்க வேண்டு மென்றார்.

உலகில் எத்திறத்தார் விழைவதும் இன்பமேயாம். துன்பத்தை விரும்புவார் ஒருவருமில்லை. ஆனால் அவ்வின்பத்தைப் பல்வேறு வழிகளாலும் பெறமுயன்று அறிவிற் குறைந்தார் அல்லலுறுகின்றனர். தீயவழிகளால் வருவது இன்பம் போலிருப்பினும் உண்மையில் அவைகள் இன்பங்கள் அல்ல, அவைகளால் வரும் ஏதங்கள்பல. அம்மையார் அதனாற்றான் அன்பின் வழி வரும் இன்பம் வேண்டுமென்றார். அன்பின் வழிவராத இன்பங்களெல்லாம் துன்பத்திற்குகாரணமானவைகளே. எத்தகைய இன்பம் எய்தப்பெறினும் பிறப்பு என்று

ஒன்றிருக்குமேல் அதைவிடப் பெரிதும் துன்பந்தரு வது பிறிதொன்றுமில்லை.

"பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்."

கூலவாணிகன் சாத்தனார்.

பிறவாமையைப்போல் சிறந்த இன்பமில்லை. அதனால் தான் மெய் யறிஞர்களெல்லாம் பிறவாமை வேண்டும், என்று பெருமானைப் பிரார்த்திக்கின்றார்கள்.

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை"

என்றார் நாவலர் பெருந்தகையும்

"மாதாவுடல் சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவுங் கைசலித்து விட்டானே—நாதா
இருப்பையூர் வாழ்சிவனே யின்னமோ ரன்னை
கருப்பையூர் வாராமற் கா."

பட்டினத்தடிகள்.

பிறவாமைக்கு கூடாது பிறப்புண்டாகுமானால் அப் பிறப்பினிடத்தில் இன்றியமையாது வேண்டப்படுவது இன்னதென்று அறிவிக்கிறார். அஃதாவது ஆண்டவனை யென்றென்றும் மறவாதிருத்தலேயாம். உலகில் மானிடப் பிறப்பு கொண்டார் பலரும் சிறுதொழிலிலும், சிற்றின்பங்களிலும் பாழ்கி வறிதே காலங் கழித்து வருகின்றனர். தலைவனையும் உணர்கின்றாரில்லை, தன்னையும் உணர்கின்றாரில்லை. அங்ஙனம் உணராவழி மீண்டும் துன்பத்திற்காளாகின்றனர். ஆதலாற்றான் சிறந்த அன்பர்கள் கடவுளைப் பிரார்த்திக்குங்கால் அவரை என்ஞான்றும் மறவாதிருக்குந்தன்மை வேண்டுமென்பர்.

"புழுவாய்ப்பிறக்கினும் புண்ணியாவுன்னடியென்மனத்தே
வழுவாதிருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க்கிரங்கி யிருந்தருள்செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற் கங்கைசெஞ்சடைமேல்வைத்ததீவண்ணனே"

"துறக்கப்படாத வுடலைத்துறந்து வெந்தூதுவரோ
டிறப்பனிறந்தா லிருவிசும பேறுவ னேறிவந்து
பிறப்பன பிறதாற பிறையணிவாசடைப்பிஞ்ஞகன்பேர
மறப்பன சொலோ வெனறென்னுள்ளங் கிடந்துமறுகிடு

"பனைக்கை மும்மதவேழ முரித்தவனை [மே
நினைப்பவர்மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனே."

மறவாமை மாத்திரம் கிடைத்தால் போதாது பிறவியின் பெரும்பயன் தொண்டு செய்தலாம். தொண்டுசெய்தலாவது முத்திறப்படும் மனத்தொண்டு, வாக்குத்தொண்டு, காயத்தொண்டு என்பனவாகும். இம்மூன்றனுள் வாக்குத்தொண்டு நடுநாயகமாக விருப்பது. இறைவனது புகழைக் கசிந்துருகிப் பாடுவதும் அவனது உரிய மந்திர எழுத்துக்களை உச்சரித்தலுமே வாக்கினாலாகிய தொண்டாகும். ஆதலால் அம்மையார் மகிழ்ந்து பாடி இருக்கவேண்டுமென்றார். அவ்வாறு மகிழ்ந்து பாடுவதும் ஆடும் ஐயன் அடியின்கீழேயே இருந்து செய்யவேண்டுமென்று விரும்புகின்றார்.

சிவபெருமானது திருமூர்த்தங்கள் பலவுண்டு, அவற்றுள் ஒன்று திருநடன மூர்த்தம் ஆகும். உலகில் கூத்துகள் பலவுண்டு. மக்களால் ஆடப்படுங்கூத்துகளெல்லாம் முடிவுடையன, பெரிதுந்துன்பத்துட்புகுத்துவன. அவைகளைவிடச் சிறந்தன தேவர்களால் ஆடப்படுங்கூத்துகள். அவைகளினுள்ளுஞ் சிறந்தது சிவபெருமானார் திருநடனம். திருநடனம் இல்லையேல் உலகத்தோற்றம் முதலியன இல்லையென்று அறிந்துணர்ந்த அறிஞர் கூறுவர், பிறர் ஆடுங்கூத்துகளெல்

லாம் இருகால்களாலும் ஆடப்படுவன. சிவபெருமானது திருக்கூத்தோ ஒற்றைத்தாளால் நடிக்கப்படுவது. அங்ஙனம் நடனம் செய்வதால் உலகம் தோன்றும், காக்கப்படும், ஆன்மாக்களுக்கு மறைத்து வினைகள் ஊட்டப்படும், சம்கரிக்கப்படும். இறுதியாய் அனுக்கிரகமும் செய்யப்படும். அதனாலன்றோ ஆண்டவன் கூத்தை அறிஞர் 'சோதில் கூத்து' என்று கூறுவர்.

"பூமலி கறபகப் புத்தேள் வைப்பு
நாமநீா வரைப்பினானில வளாகமு
மேனைய புவனமு மெண்ணீங் குயிருந்
தானே வகுத்ததுன் றமருகக் கரமே
தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
யனைத்தையுங் காப்பதுன் னமைத்தகைத் தலமே
தோற்றுபு நின்றவை தொல்லுல கடங்கலு
மாற்றுவ தாரழ லமைத்ததோர் கரமே
யீட்டிய வினைப்பய னெவற்றையு மறைத்துநின்
றூட்டுவ தாகுநின் னூன்றிய பதமே
யெடுத்தவின் னுயிர்கட் களவில்பே ரின்பங்
கொடுப்பது முதல்வநின் குஞ்சித பதமே
யித்தொழி லைந்துநின் மெய்த்தொழி லாக"

* * * * * [குமரகுருபரர்.

அம்மையாரின் பிரார்த்தனையைக் கேட்ட பெருமானும் அவைகள் கைகூடுமாறு அருளினர். அருளி, "அம்மையே நீ ஆலங்காட்டையடைந்து, அங்கே மாட்சி மிக்க மாநடனத்தைத் தரிசித்து ஆனந்தங்கொண்டு எக்காலத்தும் நம்மைப் பாடுவாய்" என்று மீண்டும் அருளினர்.

## 9. அம்மையார் ஆலங்காடு அடைந்தது.

இவ்வாறு இறைவனார் அருள்பெற்ற அம்மையார், உண்மைப்பொருளாக விளங்கும் உமாநாதனிடம் விடைபெற்றுக்கொண்டு வணங்கிப் புறப்பட்டனர். சொல்லுதற்கரிய பெருமையால் விளங்கும் திருவாலங்காடு என்னும் நல்லபதியை, தலையினால் நடந்து அடைந்தார். அடைந்து திருவாலங்காட்டில் ஊர்த்துவ தாண்டவஞ் செய்யும் உயர்பொருளைக் கண்டார்; கசிந்து உருகினார். எவற்றிற்கும் மூலமாயிருக்கும் மூல காரணரைப் பதிகம்பாடிப் போற்றினர். அதைத்தான் இன்றும் மூத்ததிருப்பதிகம் என்று கூறுவர். பின்னும் பெருமானைப் பெருகுகாதலுடன் வணங்கி, அவர் ஆனந்தக் கூத்தில் பெரும் வியப்பெய்தி 'எட்டியிலவம்' என்ற தலைப்பை யுடைய மற்றொரு திருப்பதிகம் பாடினர். அதையும் அறிஞர் மூத்த திருப்பதிகம் என்று கூறுவர். இவ்வாறு மாநடத்தைக்கண்டு களித்துப் பல காலும் அம்மையார் அப்பனாரை மகிழ்ந்து பாடிக் காலங் கழித்து வந்தனர். காலங் கழித்து வந்து காரைக் காலம்மையார் இவ்வாறு நற்றொண்டு புரிந்து மீனத் திங்களாகிய பங்குனி மாதத்தில் ஒளி நாளாகிய சுவாதியில் இறைவனடியில் இரண்டறக் கலந்து வாழ்கின்றனர் என்பர்.

இவர்கள் வரலாற்றை முதல் முதல் நமக்கு உபகரித்த பெரியார் ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகளாவர். அவர்கள் அம்மையாரைப் பற்றிக்கூறுங்கால் 'பேயார்க்கு மடியேன்' என்று விதந்துள்ளார். இச்சொற்றொடரைத்

துணையாகக் கொண்டு, பொல்லாப் பிள்ளையாரின் நல்லருளைப் பெற்ற நம்பியாண்டார் நம்பி எனும் பெருந்தகையார் பின்வரும் அரிய செய்யுளை அருளியுள்ளார்.

"நம்பன் திருமலை நான மிதியேனென்று தாளிரண்டு
மும்பர் மிசைததலையா னடநதேற வுமைநகலுஞ்
செமபொன னுருவனென னமமையெனப் பெறறவள்
[செழுந்தேன்
கொம்பினுகு காரைக்காலினின் மேய குலதனமே"

பின்னர் ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் இவைகளை யாதாரமாகக்கொண்டு அம்மையாருடைய அற்புதச் சரிதையை அறுபத்தாறு செய்யுட்களிற் றிருவாய் மலர்ந்தருளியுள்ளார். இப்புராணத்தின் சாரத்தைக் கொற்றவன்குடி வாழ் நற்றவராகிய உமாபதியார்

'தங்குபுசழக் காரைக்கால் வணிகன்மிக்க தனதத்தன்
றரும்புனித வதியார் மாவின்
செங்கனிக டிருவருளா லழைப்பக்கண்டு திகழ்கணவ
னதிசயித்துத் தேச நீங்க
வங்கவுட லிழந்துமுடிநடையாலேறி யம்மையே
யெனநாத னப்பா வென்று
பொங்குவட கயிலைபணிந் தாலங்காட்டிற் புனிதனட
மனவரதம் போறறினரே

என்று கட்டளையிட்டுள்ளார். இவர்களன்றி பிற ஆசிரியர்களும் பிற நூல்களிலும் பெரிதும் போற்றித் துதித்துள்ளார்கள். வேதத்தின் நுண்பொருள்களையெல்லாம் ஓதாதுணர்ந்த பாலருவாயராகிய திருஞான சம்பந்தப் பெருமான் தொண்டை நாட்டுப் பதிகளைத் தரிசித்து வருகையில் திருவாலங்காடு எனும் திவ்யபதியை அணுகினர். அணுகினராயினும் ஊரினுள்ளே புகுவதற்கும் மிகவும் அஞ்சினர். சமயகுரவ

ராகிய திருஞானசம்பந்தர் ஏன் அஞ்சினர்? காரைக்காலம்மையார் தமது தலையால் நடந்து தொண்டுபுரிந்த தலமென்று எண்ணியன்றோ? முத்தமிழ் விரகராகிய ஞானசம்பந்தர் அம்மையாரிடத்தில் எவ்வளவு அன்பு கொண்டிருக்க வேண்டுமென்று எண்ணுக.

இவ்விஷயத்தை ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய செய்யுள்.

"அம்மையிலே புவியுள்ளோ ரியாருங்காணா வேறுலகும்
போற்றிசைப்ப வம்மையாரு
மம்மை திருத்தலையாலே நடந்துபோற்று மம்மையப்பர்
திருவாலங் காடாமென்று
தம்மையுடை யவர்மூதூர் மிதிக்கவஞ்சிச் சண்பையவருஞ்
சிகாமணியார் சாரச்சென்றார்
செம்மைநெறி வழுவாத பதியின்மாடோர் செழும்பதியி
லன்றிரவு பள்ளிசேர்ந்தார்,"

## 10. அற்புதத் திருவந்தாதி முதலியன.

அம்மையார் அற்புதத் திருவந்தாதியென்ற உயரிய நூலையும் திருவிரட்டை மணிமாலையென்ற மற்றொரு நூலையும், மூத்த திருப்பதிகம் என்ற இரு பதிகங்களையும் திருவாய்மலர்ந்தருளியுள்ளார். அந்தாதியென்பது தமிழ் மொழியிலுள்ள 96 வகையனவான பிரபந்தங்களுள் ஒன்று. ஒருபாட்டின் அந்தமும் மற்றொரு செய்யுளின் ஆதியும் சீர் முதலியவைகளால் ஒன்றுபட்டிருக்கத் தொடுக்கப் பெறுவதால் அந்தாதியென்ற பெயரைப் பெறும். இது ஏனைய அந்தாதி போன்றதன்று. சிவமணம் பழுத்தது, படிப்பவர்களுக்கு அன்பு, அறிவு, அருள் முதலிய வளங்களையெல்லாம் வாய்க்கச் செய்வதால் திருவென்ற அடைமொழியைப் பெற்றது. அற்புதத்திருவந்தாதி என்ற சொற்றொடரில் அற்புதம் என்ற சொல்லை நூன் முதலில் அமைத்துள்ள சொல்லிலிருந்தாவது, பிறகாரணத்தாலாவது இந்நூலின் பெயரொடு புணர்த்திக் கூறவில்லை. மண்ணினிடத்தில் பலருங்காண, யாவராலும் ஆற்றுவதற்கரிய அற்புதச் செயலை, அம்மையார் அரனார் அருளால் சாதித்தமையால் இம்மகுடம் சூட்டப்பட்டதுபோலும். சங்கமண்டபமேறிய துங்கப்புலவர்களும், பாவல்ல காவலர்களும், கசிந்து கசிந்து உருகும் தொண்டர் பலரும் திருவாய்மலர்ந்தருளிய பாக்கள் பலவற்றையுந் தொகுத்துப் பண்டைப்பெரியோர் பதினோராந்திருமுறைப் பிரபந்தங்களாக அமைத்தார்கள். அப் பிரபந்தங்களுள்

இறைவனார் அருளிய பாசுரத்திற்கு அடுத்துவைத்திருப்பது அம்மையார் பிரபந்தங்களே. மூத்ததிருப்பதிகங்களிலிருந்து இவர்களது இசைத் தமிழ்ப் புலமை நன்கு விளங்கும். திருவிரட்டைமணிமாலை, அற்புதத்திருவந்தாதி, ஆம்தமிழ் நூல்களிலிருந்து இவருக்குள்ள இயற்றமிழ்ப்புலமை நன்கு புலப்படும். அம்மையாரது அருஞ்செய்யுள் ஒவ்வொன்றும் அற்புதமாணிக்கமாகும். அருள் பழுத்தொழுகும் கனியாகும். தமிழ்மொழியின் கண்ணே மாபாடியம் என்ற திப்பிய நூலை வகுத்த பவஞானமகற்றும் சிவஞான முநிவர், பொய்கண்டகன்ற புனிதமெய்கண்டதேவர் அருளிய சிவஞானபோதத்தைத் தம்முடைய உரையால் விளக்குமிடத்து, தம்முடைய உரைக்கு உயர் மேற்கோளாய் அம்மையார் வாக்கை உபயோகிப்பாராயின் இந்நூல்களின் அருமை பெருமைகள் கூறுந்தரத்தனவோ?

> "அறிவானுந் தானே யறிவிப்பான் றானே
> யறிவாயறிகின்றான் றானே — யறிகின்ற
> மெய்ப்பொருளுந் தானே விரிசுடர் பாரகாய
> மப்பொருளுந் தானே யவன்"

என்ற இவ்வரியமணி போன்ற செய்யுளை ஸ்ரீமாதவச் சிவஞான முநிவர் சிவஞானபோதம் இரண்டாஞ் சூத்திரத்தையும், பதினோராஞ் சூத்திரத்தையும் விளக்க ஒரு முறைக்கு இருமுறை யெடுத்து மேற்கோளாகக் காட்டி விவகரிப்பது நோக்கத்தக்கது.

அம்மையார் இறைவனது பலதிருக்கோலங்களிலும் ஈடுபட்டிருந்தாரென்பதை இறைவனை யழைப்பதற்கு அவர்கள் கூறுஞ் சில சொற்றொடர்களால் அறியலாம்.

மூத்த திருப்பதிகத்தில் எங்கள் அப்பன், குழகன், அழகன், பரமன், மாயன், விமலை, அடிகள் கூவிர்மதியர் சடைமேலுடையார், அரவம்அரையிலார்த்த அடிகள் எனபனவற்றை அருளியுள்ளார்கள். திருஇரட்டை மணிமாலையில் ஆண்டவனைப்பற்றிக் கூறுங்காலத்து, பிறவாதுகாக்கும்பிரான், அராநின்று இரைக்கும் சடைச் செம்பொன்நீண் முடி யந்தணன், காத்தளிக்கும் வல்லாளன், சடைமேற் பொங்கரவம்வைத்துகந்த புண்ணியன், வேதியன், வேதப் பொருளான், ஆதிரை நன்னாளான், தழற்கொண்ட சோதிச செம்மேனியெம்மான், கூற்றுருவங்காய்ந்தான், இலங்கு நீற்றன், தடங்கடனஞ் சுண்டார் என்று பல தொடர் மொழிகளால் அருளியுள்ளார்.

இனி அற்புதத்திருவந்தாதியில் கூறியுள்ள சில மொழிகளைப் பார்ப்போம் எந்தாயென விரங்குமெங்கள் மேல் வெந்துயரம் வந்தாலது மாற்றுவான், அனற் கங்கையேற்றான், எனக்கினிய வெம்மான், நஞ்சுமிழ் நீணாகத்தான், தானவனைப் பாதத்தணிவிரலாற் செற்றான், ஒன்னாதார் மூவெயிலும் ஓரம்பாலெய்தான், பேழ்வாயரவசைத்தான், மனக்கினிய சீராளன், எங்குற்றான் என்பீர்கள் என்போல்வார் சிந்தையினும் இங்குற்றான், அராப்பூண்டுழலு மெம்மான், உலக மேழினுக்குங் கண்ணாளன், ஏகமாய் நின்றான், தன்னையறியாத் தன்மையன், இவைகள் போன்ற இன்னும் பல மொழிகள் ஆம். இம் மொழிகளிலிருந்தே அம்மையாரின் மனப் பாக்கும் அவர்களுளத்து விழுத்தகுபழுத்த ஞானமும் புலப்படும்.

# 11. முடிப்புரை.

நம் தமிழ் நாட்டில் காரைக்காலென்ற திருப்பதியில் காரைக்காலம்மையார் அவதாரஞ் செய்தார்கள். மனம், வாக்கு காயம் என்ற மூன்றுவகையாலும் புனிதமுற்று விளங்கினமையால் புனிதவதியார் என்று பெயர் பெற்றனர். கல்வி, அறிவு, ஒழுக்கம் அன்பு முதலியவைகளால் சிறந்து விளங்கினர். கணவனிடத்தில் கற்பில் வழுவாது காதல்கொண்டு ஒழுகி வந்தனர். சிவனடியாரிடத்தும் ஈசனிடத்தும் பக்திகொண்டு அவர்கட்கு வேண்டுவன புரிந்துவந்தனர். கணவனார் தந்த மாம்பழத்தை அடியார்க்கு அளித்துவிட்டுப் பின்பு ஒன்றிற்கு இரண்டு கனிகளாக அம்மையார் சிவனருளாற் பெற்றார். பெற்றதைக்கண்ட கணவனார், பிரிந்து சென்று வேறு மனைவியை மணங்கொண்டு மகவொன்றையும் ஈன்றெடுத்தார். பிரிந்த கணவனார் வருவாரென்று அம்மையார் தம்முடைய உடலைப்பேணி வந்தார். பின்னர் கணவன் காலுற வணங்கியதைக்கண்ட அம்மையார் வனப்புள்ள தசையையுதறி பேய்வடிவங்கொண்டார். திருக்கைலாயமலையைச் சார்ந்தார் திருமலையினைப்போல் தலையால் நடந்தேறினர். அம்பிகையின் அருள்நோக்கைப் பெற்றார். பிறந்தொருவரையும் அம்மையேயென்றழைக்காத ஆண்டவனால் அம்மையே என்று அழைக்கப்பெறும் பேற்றைப் பெற்றார். பெருமானை நேரிற் கண்டு அப்பனே என்று அம்மையார் அழைத்தார். வேண்டுவனவற்றை வேண்டிப் பெற்றார். திருவாலங்காட்டை யடைந்து திருநடனங்கண்டு இன்புற்றார். இசைத் தமிழ் இயற்

றமிழ் மணக்கமழ மூத்ததிருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை அற்புதத்திருவந்தாதி ஆகிய நூல்களை அருளிச் செய்தார். இவ்வளவு உயரிய பெருமைகளுக்கெல்லாங் காரணங்கள் என்ன? கல்வி அறிவு, ஒழுக்கம் அன்பு என்பவைகளன்றோ? மண்ணிற் பிறந்த பெண்பாலார் ஒருவர் யாவருங்காண அண்ணலாரால் அம்மையே என்று அழைக்கப்படுவாராகுதல் அதைவிடப் பெறத்தக்கபேறென்ன? அம்மையாரைப் போன்ற ஒப்புயர்வற்ற நலங்கள் வாய்க்கப்பெற்ற பெண்ணிற் பெருந்தகையார் பலர் நமது நாட்டில் திகழ்ந்து வந்தனர் என்பதைப் பல நூல்கள் வாயிலாக அறியலாம். பிற்றை நாளில் ஏதோ சில காரணங்களால் இத்தகைப் பெருந்தகையார் பலரை நமது நாட்டில் காண்பதற்கில்லாது போயிற்று. நம்முடைய நாடு முன்னேற்ற மடைவதற்கு முதற்காரணமாயிருப்பவர் பெண்மக்களே. அவர்கள் வழிநிற்கும் உலகர். ஆதலால் அம்மையாரிடத்திற் காணப்பட்ட திவ்விய குணங்களெல்லாம் நம்முடைய நாட்டுப் பெண்மக்கள்பால் உண்டாதல் வேண்டும்.

அம்மையார் உருவுந்திருவும் ஒருங்கே வாய்க்கப் பெற்றிருந்தும் கல்வியிற்றேர்ந்து விளங்கினர். வண்டல் பயிலுங்காலத்தும் ஆண்டவனின் அருட் குணங்களையும் அடியார் பெருமைகளையும் பாராட்டிப் பேசி வந்தனர். மணங்கொண்டகாலத்தும் மணவாளனது கருத்துக்கு ஒரு சிறிதும் மாறுபட்டு நடக்கவில்லை. கற்பிற் சிறந்து கணவரது கருத்துக்கிசைந்து நடந்த காரணத்தாலன்றோ கண்ணுதலாரும் ஒருமுறைக்கு இருமுறை மாங்கனிகளை அருளினர். கணவனார் அஞ்சிப் பிரிந் ஒதுங்கிய காலத்

தும் அம்மையார் அவரைப் பின்தொடர்ந்து வழக்கிட வில்லை. கட்டழகையெல்லாம் கணவன் முன்னே உதறி விட்டு, அன்பையும் அறிவையும் அகில நாயகன் அடியில் ஒப்பித்தனர். கற்ற கல்வியின் பயனாக, பரமனைப் பல அரும்பாக்களால் பாடி மகிழ்ந்தனர்.

அம்மையாரைப் பின்பற்றியே நம் நாட்டுப் பெண்களும் கல்வியைப் போற்ற வேண்டும். கற்றவழி நிற்றல் வேண்டும், மணம் புரியுங்காலும் தந்தைதாய் சொல்வழி நிற்றல் வேண்டும். மணங்கொண்ட பின்னர் கணவன் சொல்வழி நிற்றல்வேண்டும். அவன் மனங்கோணுமாறு ஒருசிறிதும் வழுவுதலாகாது. தங்களை எழிலுறப்புனைந்து கொள்வதெல்லாம் கணவன் மனதிற்குக் களிப்பை யூட்டுவதற்கு என்றே கடைப்பிடிக்கவேண்டும். உலக நிலையில் எங்ஙனமிருப்பினும் உயிருக்குயிராகிய ஆண்டவனையும் அவர் தம் அடியவர்களையும் மறத்தலாகாது. அன்னார்கட்கு அன்புடன் பணி செய்தல் வேண்டும், அறிந்தாங்கு பரமனைப் பாடிப் புகழ்தல் வேண்டும். இந்நிலைகளெல்லாம் கைகூடுதற்கு மகளிரெல்லாம் உலையா முயற்சி கொள்ளவேண்டும். ஆடவர்களும் உடனிருந்து உதவல் வேண்டும். இங்ஙனம் ஊக்கங்கொள்வோமானால் நாடும் உய்யும். நாமும் உய்வையுறுவோம். என்றென்றும் அம்மையாரின் அடிபணிந்து அழிவில் இன்பம் எய்துவோமாக.

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தே — னிறந்திகழு
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
யெஞ்ஞான்று தீர்ப்ப திடர். 1.

இடர்களையா ரேனுமெமக்கிரங்கா ரேனும்
படருநெறி பணியா ரேனுஞ் — சுடருருவி
லென்பறாக் கோலத் தெரியாடு மெம்மானார்க்
கன்பறா தென்னெஞ்சவர்க்கு. 2.

இறைவனே யெவ்வுயிருந் தோற்றுவிப்பான் றோன்றி
யிறைவனே யீண்டிறக்கஞ்செய்வா — னிறைவனே
யெந்தாயென விரங்கு மெங்கண்மேல் வெந்துயரம்
வந்தாலது மாற்றுவான். 3.

யானேதவமுடையே னென்னெஞ்சே நன்னெஞ்சம்
யானே பிறப்பறுப்பானெண்ணினேன் — யானேயக்
கைம்மா வுரிபோர்த்த கண்ணுதலான் வெண்ணீற்ற
அம்மானுக் காளாயினேன். 4.

எனக்கினிய வெம்மானை யீசனை யானென்றும்
மனக்கினிய வைப்பாகவைத்தே — னெனக்கவனைக்
கொண்டேன பிரானாகக் கொள்வதுமே யின்புற்றே
னுண்டேயெனக் கரிய தொன்று. 5.

அரனென்கோ நான்முகனென்கோ வரிய
பரனென்கோ பண்புணரமாட்டேன் — முரணழியத்
தானவனைப் பாதத் தனிவிரலாற் செற்றானை
யானவனை யெம்மானை யின்று. 6.

அறிவானுந் தானே யறிவிப்பான்றானே
யறிவாயறிகின்றான்றானே—யறிகின்ற
மெய்ப் பொருளுந் தானேவிரிசுடர் பாராகாய
மப்பொருளுந் தானே யவன்.

ஒருபா லுலகளந்த மாலவனு மற்றை
யொருபாலுமை யவளாமென்று—இருபாலு
நின்னுருவமாக நிறந்தெரிய மாட்டோமால்
நின்னுருவோ மின்னுருவோ நேர்ந்து. 8.

அன்றுந் திருவுருவங் காணாதேயாட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலே—னென்றுந்தா
னெவ்வுருவோ னும்பிரானென்பார்கட்கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவ மேது. 9.

காலையே போன்றிலங்குமேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு—மாலையின்
தாங்குருவேபோலுஞ் சடைக்கற்றை மற்றவற்கு
வீங்கிருளேபோலுமிடறு 10.

கண்டெந்தை யென்றிறைஞ்சிக் கைப்பணியான் செய்யே
அண்டம்பெறினு மதுவேண்டேன்—றுண்டஞ்சேர் [னேல்
விண்ணுந்திங்களாய் மிக்குலகமேழினுக்குங்
கண்ணானாய் நீதென் காத்து. 11.

கண்ணாரக்கண்டு மெனகையாரக் கூப்பியு
மெண்ணார வெண்ணத்தாலெண்ணியும்—விண்ணோன்
எரியாடி யென்றென்று மின் புறுவன்கொல்லோ
பெரியானைக் காணப் பெறின். '2

நூலறிவுபேசி நுழைவிலாதார் திரிக
நீலமணிமிடற்றானீர்மையே—மேலுலகத்

எக்கோலத் தெவ்வுருவா யெத்தவங்க செய்வார்க்கு
மக்கோலத் தவ்வுருவே யாம். 13.

ஒன்றே நினைந்திருந்தே னொன்றே துணிந்தொழிந்தே
னொன்றே யென்னுள்ளத் துள்ளடைத்தே —
னொன்றேகாண்
கங்கையான்றிங்கட் கதிர்முடியான் பொற்கொளிசே
ரங்கையாற் காளாமது 14.

உரையிறு லியமாலை யாதாகி வெங்கடாக்
கரைவிறுற் காமாக்காற பேய் சொற — பரவுவா
ராராத வன்பினொ டண்ணலை சென்றேத்துவார்
பேராத காதல் பிறந்து 15.

ஜனானுகூல பிரஸ், திருச்சி.